# சிரித்திரன்



மாசிலா மனிதா என்கோ மறுவிலா மன்ற என்கோ
கூசிடாத் திறலோய் என்கோ குன்றிடா விறலோய் என்கோ
ஆசியா பிரிக்கா மக்கள் அணைத்திடும் அன்பா என்கோ
நாசரே நமது கோவே நம்மையேன் மறந்தீர் ஐயா.

CHIRITHIRAN


• A CARTOON MAGAZINE
• நகைச்சுவை ஏடு

ஐப்பசி 1970

WHOLESALE AND RETAIL

DEALERS IN PAPERS,

PRINTING INK AND

STATIONERY ETC.

F. JEEWAJEE & BROS.

No. 50, New Moor Street,

COLOMBO-12.

சிரித்திரன்

ஐப்பசி: 1970

நகை. 6

சுவை: 1



திருமண அழைப்பிதழ்:- அன்புக் கட்டளை

மணவறை:- அறையில் வாழ்ந்த பிரமச்சாரி இல் அறை புகுமுன் ஏறும் படி

தோழன்:- கலியாண நாடகத்து உபநடிகன்

தோழி:- பின்னணிப் பாடகி

மணமகன்:- ஒரு நாள் கதாநாயகன்

மணமகள்:- என்றும் கதாநாயகி

கணையாழி:- பொன்விலங்கு

தாலி:- மணமகள் கழுத்தைக் கொடுத்து காப்பாற்றுவாள் என எண்ணி மணமகன், மணமகளுக்குக் கழுத்தில் அணியும் பதக்கம்.

அம்மி மிதித்தல்:- மணமகன் முதன் முதல் மணமகளுக்குச் செய்யும் பாத பூஜை.

அருந்ததி:- மணமகன் மணமகளுக்கு சினிமா நட்சத்திரங்களைக் காட்டமுன் காட்டும் நட்சத்திரம்

அறுகரிசி:- தம்பதிகள் எந்நாளும் பாண் சாப்பிடாது சோறு சாப்பிட வேண்டும் என்று சபையோர் செய்யும் அரிசி ஆசீர்வாதம்


தாம்பூலம்:- தம்பதிகளைக் குறை கூறாது போகும்படி வாயை நிரப்பி அனுப்பும் செம்கலவை.

## மைனர் மச்சான்

மாயன்



# டாமோடிரன் அம்மியார்



Mrs. டா: டார்லிங்.
Mr. டா: யேஸ் டார்லிங்.
Mrs. டா: என்னை இனி
டமில் பண்பாடோடுதான்
அழைக்க வேண்டும்........
Mr. டா: அது எப்படி டார்லிங்
Mrs. டா: டாமோடிரன் அம்மியாரென்று
Mr. டா: யேஸ் டார்லிங்

## ஏன் படைத்தாய் இறைவா?

அன்பென்னும் உள்ளத்தில் உன்னைக் கண்டேன்
அழகென்னும் உருவினிலே உன்னைக் கண்டேன்
இன் சொல்லின் இனிமையிலே உன்னைக் கண்டேன்
இரங்கு மன உணர்விலே உன்னைக் கண்டேன்
மண்ணகத்தில் புதுமைகளைப் படைத்த நீயே
மானிடப் பிறவிகளைப் பிரித்து வைத்தாய்?
நன்று வாழ் நல்வறங்கள் படைத்த ஈசா
நானிலத்தில் சாதியினை ஏன் படைத்தாய்?

செல்வி. ச. பாலதேவி

முத்தர்:- அம்மானின் நிலைமை வரவர மோசமாகி வருகிறது.

சுப்பர்:- என்னப்பா சொல்கிறர்? நேற்றுத்தானே அம்மான் நெல்வித்த காசு என்னிடம் வாங்கிப் போனுர்.

முத்தர்:- நீ ஒண்ணு! ஜோர்டான் அம்மான் யுத்தத்தைச் சொன்னேன்.

ச. ரா. பா. சர்மா

—

மனைவி:- உங்கள் மருமகள் வீட்டுக்கு வந்ததும் திக்கு திசை தெரியாது இப்படி நடக்கிருளே. ஏனென்று கேட்கப் படாதா?

கணவன்:- போடி அசடு! அவள் வந்து விமானம் திசை திருப்பிவிடப் பட்டதாம் அது தான்.

ச. ரா. பா. சர்மா

—

ஒருவர்: தமிழ் மக்களுக்கு எப்போ விழிப்புணர்ச்சி வரும் தெரியவில்லை!

மற்றவர்: விழிப்புணர்ச்சியில்லாமலா விடிய விடிய கோவில் திருவிழா, சினிமா வென்று விழித்திருக்கிறர்கள்.

வீ.

## சந்தை மொழிகள்

1. நல்ல புடலங்காய் நீளமில்லை என்றுனும்.

2. ஆள் கூட விலை கூடும்.

3. குத்தகைக்காரனுக்கு கத்திரிக்காய் விற்ருல் என்ன? கருவேப்பிலை விற்ருல் என்ன?

4. சனமுள்ள போதே விலையை கூட்டு.

5. ஓசித் தரகர் கத்தரிக்காய் சூத்தை என்றுனும்.


6. சந்தை கலையும் வரை மழை பொறுக்குமா?

7. ஏற்றப்போனல் [பஸ்] றைவருக்குக் கோபம் இறங்கச் சொன்னல் வியாபாரிக்குக் கோபம்.

8. சந்தை கலைய விலை குறையும்.

9. தவிடானுலும் சந்தையில் வில்.

—இரா. தர்மலிங்கம




பொற்செழியன். அடம்பன். நெடுங்கேணி.

கே: தங்கள் மகுடி இலங்கையில் செய்ததா அல்லது வெளி நாட்டில் செய்ததா?

ப: மதியில்லாதவனு நான் இறக்குமதியை விரும்ப.

★

செல்வி, புஷ்பராணி நடேசன், 23 புராணவிகாரமாவத்த கொழும்பு.

கே: மனிதன் மனிதனுக வாழ வேண்டுமென்ருல் முதலில் எதைக் கடைப்பிடிக்கவேண்டும்.

ப: குடும்பக்கட்டுப்பாட்டை

★

சி. ஐயவர்மன், மங்களகிரி, ஏழாலை மேற்கு. சுன்னுகம்.

கே: மகுடியென்ற பெயர் சூட்டியிருக்கிறீர்களே அதன் அர்த்தமென்ன?

ப: பாம்புபோல் எழும் கேள்விகளுக்கு பண்ணுடன் பதில் சொல்வதால் மகுடியென்ற பெயரைச் சூட்டினேன்.

★

தமிழன்பன், யாழ்ப்பாணம்.

கே: கடந்த பொதுத்தேர்தலில் சில பெரிய தமிழ் அரசியல் வாதிகள் தோற்றதிற்குக் காரணம் என்ன?

ப: வாக்காளர்கள் அவர்கள் இளைப்பாற வேண்டுமெனும் காரணத்தால் தோற்கவைத்தார்கள்.

செல்வி. அஞ்சலா, ராணிவாசா தனியூற்று.

கே: மலரில் இருக்கும் மணம்போல் பெண்களில் இருப்பதென்ன.

ப: நாணம்.

சிவநேஸ்வரி செல்லையா, தெல்லிப்பளை.

★

கே: அன்றைய இலக்கிய மேதைகளா இன்றைய இலக்கிய மேதைகளா மேலானவர்கள்.

ப: அன்றுஎழுத்தாணியால் படைத்த இலக்கியத்திற்கு இன்றைய மேதைகள் பார்கர் 51 பேனுவால் விரிவுரை எழுதுகிருர்கள் தங்கையே.

★

நா. கமலநாதன், இந்திரா இல்லம், காளி கோவில் மேற்கு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கே: ஒரு மணமாகிய பெண்ணிற்கு கணவன் தெய்வம் தானே?

ப: கணவன் தெய்வமில்லாதகாரணத்தால்தானே பெண்கள் கோயிலிலுள்ள தெய்வத்தை வழிபடுகிருர்கள்,

★

தா. காந்தி, வவுனியா மோட்போர்ஸ். வவுனியா.

கே: நான் பிறருக்கு எவ்வளவு நன்மை செய்தாலும் எனக்குத் தீமையே செய்கிருர்கள். ஏன்?

ப: பால் தரும் ஆட்டைத் தான் மனிதன் கொன்று புசிக்கின்ருன். கொடும் புலியை மனிதன் கொன்று புசிப்பதில்லையே.

★

ய. இரத்தினேஸ்வரி, நெடுநகர் மத்தி நெடுந்தீவு.

கே; காதலில் தோல்வியுற்ற கன்னியை எதற்கு ஒப்பிடலாம்?

ப: தேர்தலில் தோல்வியுற்ற அபேட்சகருக்கு.

★

ஆர். செல்வராஜ், 16 சினேக் லேன் திருக்கோணமலை.

கே: கடலில் அடையக் கூடியது எது. அடையமுடியாதது ஏது.

ப: அடையக்கூடியது கட்டுமரம். அடைய முடியாதது கடத்தல் சாமான்.

★

க. தியாகராசா, 6 முகத்தான் குளம், செட்டி குளம்.

கே: ஒரு பிள்ளைக்கு தாயிலா அல்லது தந்தையிலா பாசம் அதிகம்.

ப: உமது இரு கண்களில் எந்தக் கண்ணில் உமக்குப் பாசம் கூட என்று கூறமுடியுமா?

**பரிசுச் செல்வி**


செல்வி. விக்நேஸ்வரி செல்லையா, ரெம்பிள் ரோட் நல்லூர்.

கே: மகுடியாரே மதுப் போதையை விரும்புபவர்கள் கலைப் போதையை விரும்புவார்களா?

ப: அவர்களுக்கு அபின் நய ரசனையுண்டு, அபிநய ரசனையில்லை.

குறிஞ்சி மோகன், மாத்தளை.

கே: இன்றைய வாலிபர் களுக்கு நாட்டுப்பற்று உண்டா?



ப; நாரியர் பற்றுண்டு நாட்டுப் பற்றில்லை. காதலிக்காக உயிர்விடத் தயாராயிருக்கிறார்கள். நாட்டிற்காக உயிர்விடத் தயாராயில்லை.

---

ஆர். பி. ராஜா, தேவாலங்ந்தை எஸ்டேட், டெகியோவிற்ற,

கே: இறைவன் உன்முன் தோன்றி பக்தா உனக்குயாது வரம்வேண்டுமென்றுகேட்டால், நீர் கேட்க விரும்பும் வரம்யாது?

ப: காக மூளையை தமிழருக்குத் தந்தருள வேண்டுவேன். காகத்திற்கு இனப் பற்றுண்டல்லவா.

செல்வி. அருந்ததி நாகராசா, அடம்பன்.

கே: தமிழினத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும்.

ப: தோத்திரம் பாடுவார், சாஸ்திரம் பார்ப்பார், கோத்திரம் கேட்பார்.

வி. உதயகுமார், ஒட்டிசுட்டான் ரோட், நெடுங்கேணி.

கே: மாதம் மும்மாரி பொழிகிறதா?

ப: மும்மாரியில்லை; மாதம் பூராவும் மாரிதான் உத்தியோகமில்லாதோர் கண்ணீர் மாரி பொழிகிறார்கள்.

செல்வி. ராஜலட்சுமி நல்லூர்.

கே: தோல்வி மனப்பான்மையென்பது என்ன? வெற்றி மனப்பான்மையென்பது என்ன?

ப: தனது தலையில் தான் இடிவிழுமென பயப்படுவது தோல்வி மனப்பான்மை. தனக்குத்தான் சுவீப் விழுமென நினைப்பது வெற்றி மனப்பான்மை.

எஸ். இரத்தினசிங்கம், வவுணதீவு, நாவற்காடு.

கே: வேலையிருந்தும் செய்யாது திண்டாடுபவர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: விருந்து மேசையில் விரதமிருப்பவர்கள்.

செல்வி. சுமங்கலி சேனாதிராசா. பருத்தித்துறை.

கே: அரசாங்கம் இரண்டு கொத்து அரிசி வழங்குவதைப் பற்றி தங்கள் கருத்து.

ப: சோஷலிச நாடு சோறுடைத்து.

செல்வி. சிவபாக்கியம், வட்டுக்கோட்டை.

கே: நாயன்மார் காலத்திற்கும் நாகரிக காலத்திற்குள்ள வேறுபாடு என்ன.

ப: அன்று ஓதுவார் இருந்தார்கள் இன்று [சிகரட்] ஊதுவார்கள் இருக்கிறார்கள்.

க. பாலேந்திரன், கிளிநொச்சி.

கே: ஆபாச இலக்கியமென்றாலென்ன?

ப; இலந்தப் பய இலக்கியம்............ஊரை எல்லாம் இஸ்ஸு இஸ்ஸு இன்னு இஸுக்கும் இலக்கியம்.

சி. ராஜேஸ்வரன், மாத்தளை.

கே: கண்ணால் காணக்கூடியது எது காணமுடியாதது எது.

ப: காணக்கூடியது கலைஞனை வைத்து ஆட்டுபவன் கையில் பணம், காணமுடியாதது கலைஞன் கையில் பணம்,

செல்வி. கமலேஸ்வரி, தியாகராசா. வெள்ளவத்தை:

கே: மன ஆறுதலில்லாதவன் எவன்.

ப: அதிர்ஷ்ட லாபச் சீட்டில் ஆறுதல் பரிசு கூடப் பெறாதவன்.

செல்வி. ராஜேஸ்வரி அலெக்ஸான்டர், 103 சென்பெனடிக்ஸ் மாவத்தை கொட்டாஞ்சேனை.

கே: படித்த மனிதனுக்கும் படியாத மிருகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப; படித்த மனிதன் இறந்தால் மண்......படியாத மிருகம் இறந்தால் பொன், யானை செத்தால் ஆயிரம் பொன் அல்லவா?

ராகினி, ஸ்ரீனிவாசா, கனுக்கேணி.

கே: பெண்களைக் கண்டால் ஆண்கள் கேலி செய்வதன் நோக்கமென்ன?



ப: அன்பின் மிகுதியால் நாக்கு ஆட்டுகிறார்கள் வாலிருந்தால் வாலும் ஆட்டுவார்கள்.

**ஆர். எம். பாலகிருஷ்ணன், 74 அளுத்கமரோட் மத்துகம.**

கே: மறுபிறவியென்பது பற்றி தங்களுடைய அபிப்பிராயம் என்ன?



ப: இப்பிறவியே எனக்கு மொடேன் ஆர்ட் மாதிரி ஒன்றும் புரியவில்லை. மறுபிறவியை எப்படிப் புரிய வைப்பது.

**எஸ். ஏ. பாலசிங்கம், 6-ம் வட்டாரம், முள்ளியவளை.**

கே: ஒரு மனிதன் எப்போது மிருகமாகின்றான்.

ப: குழந்தைகளையும், வயோதிபரையும் இடித்து விழுத்தி பஸ் ஏறும் போது.

**முத்துமகாலிங்கம், கில்னர்லேன், யாழ்ப்பாணம்.**

கே: மனிதனுக்கு மொழிப் பற்று, நாட்டுப் பற்று அவசியம்.

ப: மொழியை தாய் மொழியென்கிறோம், நாட்டை தாய் நாடு என்கிறோம், ஆகையால் இரண்டும் அவசியம்

**எஸ். எஸ். மயில்வாகனம், போபெத்தை எஸ்டேட், வெல்லுப்பிட்டிய.**

கே: அடிமையில்லாத தொழில் என்ன?

ப: அன்போடு செய்யும் தொழில்.

**எம். எம். பாறூக் பாலமுனை.**

கே; நீர் இந்நாட்டின் பிரதமரானால்.

ப: இந் நாட்டின் தலைவிதியை நினைத்து வருந்துவேன்.

**டி. போஜராஜா, ஆர். கெமிலஸ், கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி கொழும்பு.**

கே: இக்கால மாணவர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இன்ஸ்டோல்மென்டில் சீனியர் பாஸ்பண்ணும் வல்லமையுள்ளவர்கள்.

**எம். கே. எஸ். தர்மநாதன், ''கயிலை'' அல்வாய் வடக்கு. அல்வாய்.**

கே: நீர் யாரையும் காதலிக்கிறீரா.

ப: காதலிக்கிறேன். கன்னித் தமிழை.

**இ. கணேஸ், வவுனியா மோட்டோர்ஸ், வவுனியா.**

கே: தகப்பனே மகனுக்கு வில்லன் ஆனால் மகன் என்ன செய்வான்.

ப: இக் கட்டத்தில் மகன் தந்தை சொல்மிக்க தந்திரமில்லையென்று ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

**அ. தனலட்சுமி, மல்லாவி. துணுக்காய.**

கே: தான் ஒரு மேதை, தனக்குத் தெரியாதது ஒன்றுமில்லையென்றும், தான் ஒரு முட்டாளென்றும், தங்களைத் தாமே விமர்சிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்.

ப: ஒரு புஸ்தகம் மாத்திரம் படித்தவன் மேதையென தன்னை விமர்சிக்கிறான் பல புஸ்தகங்கள் படித்தவன்தான்முட்டாளென தன்னை விமர்சிக்கிறான்.

**பொ. கலைச்செல்வி, ஏழாலை.**

கே: தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஏராளமாக வளர்ந்துள்ளது எது.

ப: பனை; கற்பனையல்ல.

**செல்வி. புஷ்பலீலா பெருமாள் பிள்ளை, ஆறுமையா வீதி, தெமட்டகொட.**

கே: பெண்களுக்கென தனி பஸ் ஓட விட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்.

ப: அல்லி ராச்சியத்தில் ஆண்காற்று வீசுதே டிரைவரும் கொண்டக்டரும் ஆண்களாச்சே.

**செல்வி. கே. கல்யாணி, நாகசேனை குரூப் லிந்துல.**

கே: வாழ்க்கையில் வெறுப்படைந்த ஒரு மனைவிக்கும், காதலில் தோல்வியடைந்த ஒரு காதலிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ஒன்று கூண்டுக்கிளியின் கண்ணீர், மற்றது சுதந்திரக் கிளியின் கண்ணீர்.


**இ. தனபாலசிங்கம், நெடுங்கேணி**

கே: ஆடு, மாடு, கோழி மனிதனுக்கு இம்சை செய்வதில்லை. அவற்றை கொன்று சாப்பிடுவது பாவம் இல்லையா?

ப: ஐயோ! அந்தப் பாவத்தைச் செய்ய இதயம் விரும்பவில்லை. நாக்கு விரும்புகிறதே!

**க. முருகேசு, தம்புள்ள வீதி, குருநாகல்.**

கே: கண்ணை இழந்தால் கண்ணாடி கருத்தை இழந்தால்?



ப; கருத்தரங்கு.

# சைவக்கடை - மனைவி

தலை நகரிலிருப்போருக்கு இத்தலைப்பு தடுமாற்றத்தைக் கொடுக்காது. வெளிநகரிலிருப் போருக்கு அதுவும் சொந்த ஊர்களில் இருப்போருக்கு இத் தலைப்பு சற்றுத் திகைப்பையூட் டும். அவர்களுக்கு இதைப்புரிய வைக்கவும் தலைநகரிலிருந்து இத் தொடர்பை இதுவரை எண் ணிப்பாராதவர்களுக்கு எடுத்துக் காட்டவுமே இக் கட்டுரை.


உத்தியோகம் என்ற மனை வியை மணந்த காரணத்தால், மணக்க நினைக்கும் எண்ணத்தால் பலருக்கு கொழும்போ 'புகுந்த இடமாகிவிட்டது. மனைவியும் மக்களும் ஊரிலேயிருக்க, கொழும்பிலே பிரமச்சரிய வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானவர்களின் கதை துயரம்மிகுந்தது. ஆனால் அதைச் சொல்லக் கேட்கும் போதோ, பார்த்துப் படிக்கும் போதோ சுவை நிறைந்ததாக இருக்கும். இப்படிப்பட்டோரின் கொழும்பு வாழ்க்கையைப் பல படலங்களாக விரிக்கலாம் அறை தேடு படலம், கடை தேடுபட லம், துணை தேடு படலம் (சிலருக்கு) இப்படியாகப் பல சுவையான படலங்கள் நிறைந் தது அந்த வாழ்க்கை. அறை தேடு படலம் மிகவும் சுவை நிறைந்தது.

அறையைப் பார்த்ததும் 'ஆகா' என்று சொல்லத் தோன் றும். ஆனால் 'குளியலறை, எட்டிப்பார்த்தால் 'ஆளை விட்டால் போதும்' என்று நினைக்கச் சொல்லும். இவை யிரண்டும் நன்றாக இருந்துவிட் டால்; காற்றின்றியும் மனிதன் வாழலாம் என்று விஞ்ஞானத் திற்குச் சவால் விடுத்து நிற்கும் அறையிருக்கும். 'சவுக்கந்தோப் பினிலே......பனந்தென்றல் மயக் கத்தில் படுத்துறங்கும் நிலை யெங்கே?......'

'அறையின் ஒரு கரையில்... அசைய இடமின்றி... அவிய, அவியக் கண்ணயரும் கதை யெங்கே'...எத்தகைய தியாகங் களைப் புரிந்து வாழ்கிறார்கள் நமது கொழும்பு வாழ் அன்பர் கள். இவர்களுக்கே தியாகிகள் பட்டம் பொருத்தமானது. அறை தேடு படலத்தை விரிக்க இடமில்லை. ஒரு வழியாக அறை கிடைக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். அடுத்தது சாப் பாட்டுப் பிரச்சனை.

''கோவில் இல்லா ஊரில் குடி யிருக்க வேண்டாம்'' என்று ஔவைக் கிழவி பாடிவைத்தாள். ஔவை இன்றிருந்தால் ''சைவக்கடையில்லா ஊரில் அறையெடுக்க வேண்டாம்'' என உத்தியோகம் பார்க்கும் பெரு மக்களைப் பார்த்தும் பாடியிருப் பாள். ஒரு சிலர், மனைவிக்கு உப்புக் கூடவாங்கிக் கொடுத்து உதவாதவர்கள், கொழும்பில் காலையில் 'கடகடவென' பாத் திரங்கள் கழுவும் காட்சி கண் ணுக்கினியது. இப்படியானவர் களின் ஒருநாள் வாழ்க்கையை ஊரிலுள்ள மனைவிமாரை அழைத்துவந்து காட்டினால், அவர்களின் சமையற்கலைத் திற மையைப் பார்த்து வியந்து போவார்கள். இப்படியானவர் களில் தொகை குறைவு அதிக மானவர்கள் சைவக்கடையிடம் தஞ்சம் புகுவதுதான் வழக்கம் புகுந்த இடமாகிய கொழும்பில், 'சாப்பாட்டைப் பொறுத்த வரையில்' இவர்களுக்கு சைவக் கடைதான் மனைவி. சொந்த மனைவியிலுள்ள குண இயல் புகளைப் பொறுத்து, சைவக் கடையிலுள்ள பிடிப்பும் மாறு படும். இதைச் சற்று விளக்கு வோம்.

காலையில் அறையை விட்டுக் கிளம்பியதும் நேராகச் சைவக் கடைக்குச் செல்வதுதான் முறை கடை வாசலில் கால்வைத்ததும் [கடைச் சிப்பந்திகளுக்கு பழக் கப்பட்டவரானால்] ''வாங்கய்யா என்ன சாப்பிடுவம்'' என்ற குரல் கேட்கும். ஊரில் வேலை பார்க்கும் போது மனைவி சாப் பாடுதரப் பிந்தியதால் மேலதி காரியிடம் பல நாட்கள் திட்டு வாங்கியது ஞாபகத்திற்கு வரும். சம்பளத்தில் சாறிவாங்கிக் கொடுக்காத கோபத்தில் காலைச் சாப்பாடு 'கட்' ஆகியதும் நினை வுக்கு வரும், மனைவியைத் திட் டிக்கொண்டும், சைவக்கடையை வாழ்த்திக்கொண்டும், கையைக் கழுவி உட்கார்ந்ததும் கேட்டது கிடைக்கும். சில வேளைகளில்



**சந்திரன்;-** நான் இறந்த காலத் தைப் பற்றியும் எதிர்காலத் தைப் பற்றியும் கவலைப் படுவதில்லை.

**இந்திரன்-** அப்ப நீ இறந்த காலத்தில் என்னிடம் வாங் கிய கடனை எதிர்காலத்தில் தர யோசனை இல்லைப் போலும்,

**ஜோக்கிரட்டீஸ்**

அருகிலிருந்தவர் கேட்டதும் தவறுதலாகக் கிடைக்கும். சம்பலும் சாம்பாரும் ஒரேயடியாகக் கொட்டப்படும். ஏனெனில் மனைவியைப்போல் அருகிலிருந்து கேட்கும்போதெல்லாம் ஊற்றிக் கொண்டிருக்க முடியாது. ஐந்து இடியப்பத்திற்கு மேல் பத்து இடியப்பத்திற்குரிய சாம்பார் பாயும். வீட்டில் ஒரு நாள் அதிகம் சொதியூற்றியதனுல் தட்டோடு தூக்கியெறிந்துவிட்டு வேலைக்குச் சென்ற ஞாபகம் வரும் பாவம் மனைவி, என்ற பரிதாபம் பிறக்கும். சாப்பாடு முடியும் கட்டத்தில், ''ஐயா ஒரு பால் போடுவமா?'' என்ற குரல் அப்பப்பா எவ்வளவு அக்கறை ''பிள்ளைகளுக்குப் பால் வாங்கிக் கொடுக்கலாமெண்டால், நீங்களனுப்பிய காசு சாப்பாட்டுச் செலவோடையே சரியாப்போகுது'' என்ற மனைவியின் கடிதம் ஞாபகத்திற்கு வரவே, 'ஒரு பிளெயின்டீ போடு' என்று வாய் கூறுகிறது. ''ஐயா பழம் சாப்பிடுறீங்களா'' என்று மீண்டும் குரல் அதைக் கேட்காதது போல் ''பில்லைக் கொண்டா'' என்று உத்தரவு உபசரிப்புகளைப் பார்த்தால். மனைவியைவிட சைவக்கடை ஒருபடி கூட என்று சொல்லலாம். இரண்டு பேருக்கும் மாதமுடிவிலேயே காசு கொடுப்பது வழக்கம்.

மத்தியானச் சாப்பாட்டிலும் ஒரு சுவையான கட்டமுண்டு. மனைவி இரண்டாம் முறை சோறு போடும்போது, ''சோறு போடவா'' என்று கேட்டுத்தான் போடுவாள். ஆனுல் இந்த மனைவி.........சாப்பாடு முடியுங் கட்டத்தில் தற்செயலாகத் திரும்பிவிட்டால், சோற்றைத் தள்ளிவிட்டுப் போய்விடுவாள். தன்னிடம் சாப்பிடுபவர்கள் நன்ருய்க் கொழுக்க வேண்டுமென்ற அக்கறை 'போதும்' என்று சொல்வதற்கிடையில் முழுவதும் போடப்பட்டுவிடும் 'என்ன கறி போட' என்று மனைவி கேட்பாள். ஆனுல் இங்கு சகல கறிகளும் சாப்பிட்டே ஆக வேண்டும். அந்தக் கறி வேண்டாம். என்று சொல்வதற்கிடையில் அதே கறி இலை மீது விழுந்துவிடும் புதுமனைவியின் உபசரிப்பு உள்ளூர் உவகையாயிருக்கும். சிலருக்கு, 'குடும்பத்தை கூட்டி வருவது நல்லது' என்று முடிவைத்தோற்றுவிக்கும்.

எது எப்படியிருந்தாலும் சைவக்கடைகளிருப்பதால், சாப்பாட்டு விடயத்தில் மனைவியுடனிருக்காத நிலையை மறக்கமுடிகிறது. சைவக்கடைகள் தழைத்தோங்கவேண்டுமென்று. ''சிரித்திரன்'' மூலமாக கொழும்பில் வதியும் ''கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரிகள்' வாழ்த்துகிருர்கள். அதே நேரத்தில்; ''வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்று, சைவக்கடைச் சாப்பாட்டுத் தரக் கட்டுப்பாட்டுச் சட்டம் ''ஒன்றை உருவாக்கி; சாப்பாட்டுக்காகவே குடும்பத்தைக் கொழும்பில் வைத்திருக்கும் பல நண்பர்களுக்கு, குடும்பங்களை ஊருக்கனுப்ப உதவ வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு நிறுத்திக்கொண்டு மனைவியிடம் (சைவக்கடை) புறப்படுகிறேன் மனைவிமார் என்னை மன்னிக்கவும்.

—வே. ஜே. போஸ்.

## வாசிற்றி வனிதை



வந்தாளே வந்தாள்!
வாசிற்றியில் படித்து
வந்தாளே வந்தாள்!

மூன்று வருடம் படித்து
மூவாயிரம் விழுங்கிச்
சான்ருய்ப்பட்டம் பெற்றுச்
சந்தோஷமாய் வந்தாள்!

வந்தாளே வந்தாள்
வாசிற்றியில் படித்து
வந்தாளே வந்தாள்!......

கூட்டுமுற்ற மென்ருல்
குனிவதற்குப் படும்பாடு...!
வீட்டுவேலை செய்யாள்
வீண் அரட்டையடித்திடுவாள்.

தேங்கா யுடைத்திடென்ருல்
திக்குமுக் காடிடுவாள்
நீங்கள் செய்யுங்களென
நியாயம் பேசுகின்ருள்.

வந்தாளே வந்தாள்!
வாசிற்றியில் படித்து
வந்தாளே வந்தாள்...

தங்கையுதவி செய்தால்
'தாங்ஸ்' சென்று சொல்கின்ருள்
இங்கிலிசு படித்தவளாம்
எங்களுக்கோ விளங்காது.

வந்தாளே வந்தாள்!
வாசிற்றியில் படித்து
வந்தாளே வந்தாள்...

என்னேடு வெளியில்வர
ஏனேபெரு வெட்கம்!
தன்னருமைத் தோழியரைத்
தயார் பண்ணிவைத்திடுவாள்!

இங்கிலிசுப் படமென்ருல்
இன்முகத்தோடு செல்வாள்
எங்கள் தமிழ்ப் படமென்ருல்
இவளுக்குத் தலையிடியாம்!

வந்தாளே வந்தாள்!
வாசிற்றியில் படித்து
வந்தாளே வந்தாள்...

கையில்லாச் சட்டையுடன்
கட்டைக்கவு ணணிவாள்
அய்யையோ அலங்கோலம்
அவள் என் மகள்தானே?

—கருணையோகன்

மல்லிகை

கலை இலக்கிய
மாத இதழ்

ஆசிரியர்:
டொமினிக் ஜீவா
60, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,


## வதன காந்தி
[ முகப்பரு மருந்து ]

உங்கள் அழகிய முகங்களைக் கெடுத்து விகாரப்படுத்தும் பருக்கள், தழும்புகள், கரும்புள்ளிகள், வங்கு ஆகியவைகளை மாயமாக மறையச் செய்து முக வசிகரத்தை தரவல்ல பல அரிய மருந்துகளால் தயாரிக்கப் பெற்றது.

**விலை தபாற் செலவுடன் ரூபா. 3-50**

கிடைக்குமிடம்
கலா நிலையம், 19/1 செட்டியார் தெரு, கொழும்பு - 11

---

சிறந்த வர்ண அச்சக வேலைகட்கு

விஜயா இண்டஸ்ட்ரீஸ்
236, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.

---

தித்திக்கும் அரசியல் ஏடு, தீந்தமிழ் புரட்சி ஏடு, திக்கெட்டும் தமிழ் முழக்க ஏடு, செந்தமிழ் வளர்ச்சி ஏடு, இளைஞர்களின் எழுச்சி ஏடு.


இதுவே
## "கண்ணியம்" தமிழ் ஏடு

சாதிக்கு சவுக்கடி சம நீதிக்கு முதல் படி கேள்விக்கு தனிப்பதில்

தொடர்பு கொள்ளவும்
**ஆசிரியர் — கண்ணியம்**
**இல. 132**
**உருத்திரபுரம்**

---

## போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -




விடை:- (13-ம் பக்கம் பார்க்க) ————




1. ஜெ. ஆயிஸா - இல-11 மெயின் வீதி, மத்துகம.

[கடிதத் தொடர்பு, பத்திரிகை படித்தல் பெண்கள் மட்டும்]

2. ஆர். ரவீந்திரரஞ்சன் கொழும்பு வீதி-புத்தளம்.

[முத்திரைகள், காட்சிப் படங்கள், நாணயங்கள் சேகரித்தல், பேனா நண்பர் தொடர்பு.]

3. மொஹமட் வரீட் - ''சின் சின்னாட்டி'' 52/2, செட்டி தெரு, புத்தளம்.

[பிரதம எழுது வினைஞர், உள், வெளிநாட்டு நண்பர்கள் பெறுதல், வானொலி கேட்டல், நாவல் வாசித்தல்]

4. நிசார் - ஏ. காதர், 33, வெலிமட வீதி, பண்டாரவளை. [எழுதுவினைஞர்-நண்பர்களை சேகரித்தல் கடிதத் தொடர்பு, முத்திரை சேகரித்தல்]

5. வெ. தங்கவேல்-நம். 262, லுனுகலை.

[சொந்த வியாபாரம்-பத்திரிகை படிப்பது முத்திரை சேகரித்தல், மின்சார உபகரணங்கள் செய்தல்]

6. அ. சாமிநாதன், றோ. க. பாடசாலை-அடம்பன் மன்னார். [கதைகள் வாசித்தல், சித்திரம் வரைதல், வானொலி கேட்டல்]

7. பி. யு. ராஜன்-அம்பிகை மில்-அம்மன் கோயிலடி. தெல்லிப்பளை.

[சித்திரம் வரைதல், ரேடியோ கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

8. எம். ஏ. சமூன்-20 முகிதீன் மொஸ்க் வீதி, யாழ்ப்பாணம்.

[முத்திரை சேகரித்தல், கடிதத் தொடர்பு. பயனுள்ள புத்தகங்கள் வாசிப்பது-வானொலி கேட்கல்.

9. பிரேம்கான். அகமது லெவ்வை-பட்டாணிச்சி புளியங்குளம் வவுனியா.

[உணவு உற்பத்தி, உடற்பயிற்சி பத்திரிகை நூல் படித்தல் புகைப் படம் சேகரித்தல்]

10. ஸ்ரீஸ்கந்தராசா-மே பா கந்தையா வியாபாரி மூலை-பருத்தித்துறை.

[முத்திரை சேகரித்தல், துடுப்பாட்டம்-கால்பந்தாட்டம் படம் சேகரித்தல்.

## பேனா நண்பர் விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ------------------------------------

முகவரி: ------------------------------------

------------------------------

பொழுதுபோக்குகள்: ------------------------------

------------------------------------------------

தயவு செய்து பேனா நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இத்துடன் சிரித்திரன் 6 மாத சந்தாப் பணம் ரூ. 3 அனுப்பியுள்ளேன்.

------ திகதி

---------- கையொப்பம்

★




வக்கீல்:- நீர் உமது மனைவியைச் சரியாகக் கவனிப்பதில்லையாதலால் தான் நீர் கூப்பிட்டும் உம்முடன் வாழ்க்கை நடத்த வர உம் மனைவி மறுக்கிறாள்.

வாதி:- அவள் மறுக்கவில்லை ஐயா, ஒரு லோ தான் அவள் வருவதற்கு தடுக்கிறது.

வக்கீல்:- என்ன லோ அது.

வாதி:- எனது பாதர் இன் லோ

—வசந்தா.




## சோதனைச் சிரிப்பு

இலங்கையிலே பிரபல்யமான கல்லூரி அது. ஈழத்திரு நாட்டின் எந்தத் திசையிலும் தனது பழைய மாணவர்கள் தொழில் செய்து பரவி வாழக் கூடிய வகையில் வகை செய்தது என்றால் அதில் கடுகளவும் தற்புகழ்ச்சியில்லை. இப்படிப்பட்ட கல்லூரியிலே படித்தவருள் நானும் ஒருவன். (ஏதேனும் தொழில் செய்கிறாயா என்று கேட்டு வைக்க வேண்டாம்.)

அரசாங்க இடமாற்றுதல் காரணமாகப் பலதரப்பட்ட அறிவு கொண்ட ஆசிரியர்களின் கீழ் பயின்றவன் என்ற நற்சாட்சிப் பத்திரம் என்றுமே என் உரிமைச் சொத்து. அதைக் கூறுவதில் எனக்குப் பெருமை சாதாரணமானதல்ல. தலைகால் புரியாத பெருமை. இந்தப் பெருமை மிகு நிகழ்ச்சியில் தனியே படிப்பு, விளையாட்டு மாத்திரம் பங்கெடுக்கவில்லை. பகிடி கேளிக்கைகளும் பங்கெடுத்தன. அவற்றில் ஒன்றைப் பகர்கிறேன்.

1965'ம் ஆண்டின் பிற்பகுதியிலே க. பொ. த. சாதாரணப் பிரிவில் இருந்து க. பொ. த. உயர்தரப் பிரிவிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பரீட்சை ஒன்று நடந்தது. வகுப்பாசிரியர்களே பரீட்சையை மேற்பார்வை செய்ய வேண்டுமென்பது அதிபரின் வேண்டுகோள். அதற்கிணங்கப் படித்த தன் பயன் துலங்கும் சோதனையில் மாணவ சிகாமணிகளுள் ஓரிருவரைத் தவிர ஏனையோர் உதவி நாடிக் கண்களை ஓடவிட, நேரமும் ஓட இருபாடங்கள் எழுதிக் கொடுத்த நிம்மதி மனதை நிறைக்க மூன்றும் பாடமான தூயகணிதத்திற்குப் போயிருந்தேன்.

மூளை எங்கெல்லாமோ ஓடியது. மிகுந்த பிரயாசைப்பட்டு ஒரு நிலைப்படுத்தினேன். தூரத்தே என் நண்பனொருவனின் மேசையில் இருந்த மடக்கை வாய்ப்பாட்டுப் புத்தகம் துல்லியமாக என் கண்களுக்குத் தெரிந்தது. வேறு சிந்தனை செய்யாமல் மேசையில் தட்டி அருகே நின்ற ஆசிரியரை அழைத்தேன். அவர் ஓடோடி வந்தார். அவர் தான் என் வகுப்பாசிரியர் தமிழ் மக்களுக்குப் பிரதிநிதியாக வரும் மனித உயிர்களிலும் மேம்பட்டவர். ஆம் அவருக்குத் தமிழன்றி வேறொரு பாசையும் தெரியாது. வந்தவர் துரிதப்படுத்தினார். எழுதும் ஒற்றையை நீட்டினார். வேண்டாம் என்று சைகையால் மறுத்தேன். வேறு என்ன வேண்டும் என்று என் காதோடு முகம் உரசும் வண்ணம் குனிந்து கேட்டார். நான் பேசவில்லை. மீண்டும் சைகை என் மனவெண்ணத்துக்கு உருக் கொடுத்தது. ஆசிரியர் வலது கரத்தைத் தன் வாய் மேல் சாற்றித் தான் என் சைகையால் பதறிப் போனதாக எனக்குப் பவ்வியமாக உணர்த்தினார். நான் மசியவில்லை. கெஞ்சல் குரல் கொடுத்தேன். ஆசிரியர் மிஞ்சினார். ''அந்தப் புத்தகத்தை எடுத்துத் தந்தால் நான் சித்தியடைவேன், அதனால் வகுப்பின் கீர்த்தி அதனால் உங்கள்............'' என்று ''வரப்புயர'' என்ற ஔவையார் பாணியில் கேட்டேன். வந்ததே தமிழாசிரியரான வகுப்பாசிரியருக்குக் கோபம். என்னைப் பொசுக்கி விடுவது போல் பார்த்தார். அடுத்த கணம் ஒரு மணித்தியாலமாக இருந்து என் பெயரைச் சித்திர வடிவில் பொறித்த பரீட்சைத் தாளுடன் ஆசிரியர் வடக்கே திரும்பவிருக்கும் மகாவலி வேகத்தில் பிரதம மேற்பார்வையாளரை நோக்கிப் போனார். நான் பின் தொடர்ந்தேன்.

''கணக்குச் செய்ய மடக்கைப் புத்தகம் எடுத்துத் தரச் சொல்லி கேட்டேன் சார், இவர் கொண்டு வந்து விட்டார் என்று என் முறைப்பாட்டை முன் வைத்தேன். பிரதம மேற்பார்வையாளருக்கு எல்லாம் புரிந்தது. ஆங்கிலம் தெரியாததின் அநர்த்தம் தமிழாசிரியர்க்கு நன்கு உறைக்கக் கூடிய வகையில் என்னிடம் பரீட்சைத் தாளைத் திருப்பித் தந்தார்.

நான் வழக்கு வெற்றியாக முடிந்து வெளியேறும் வழக்கறிஞர் போல் கம்பீரமாக என் ஆசனத்தை நோக்கி நடந்தேன்.

அடுத்த ஐந்து பாடங்களுக்கும் கொண்டு வரக் கூடிய அளவு புத்தகத்தைக் காவிவந்து என் வகுப்பார் பார்த்து எழுதினார்கள், எங்களுக்குப் பொறுப்பாக விருந்த வகுப்பாசிரியரே சிரமம் பார்க்காது புத்தகங்களை ஒருவர்க் கொருவர் மாற்றித்தந்து உதவினார்.

★

மு. க. சகாதேவன்
வெள்ளவத்தை.

## ஆசிரியர் அசந்தார்

காலை பாடசாலை ஆரம்ப மணி அடித்து வகுப்புகள் அனைத்தும் ஆரம்பமாகி விட்டன. எமது கா. பொ. த. (உயர் தரம்) கூட முதற்பாடம் ஆரம்பமாகிக் கொண்டிருந்தது பௌதீகவியல் மாஸ்டரும் விமரிசையாகத் தனது பாடத்தையெல்லாம் படிப்பிக்கத் தொடங்கியிருந்தார். எம்மை விட மாஸ்டர் மிகவும் கவனமாக 'நோட்ஸ்' சொல்லுவதில் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார். நாமும் அவர் இரவிரவாக இருந்து படித்து எழுதிய 'நோட்சை'யேனும் சற்றுக் குறித்து வைப்போம் என்ற மனநோக்குடன் கொப்பிகளில் கிறுக்கிக் கொண்டிருந்தோம்.

பாடம் தொடங்கிப் பதினைந்து நிமிடம் வரை சென்றிருக்கும் இருவர் ஒருவரின் பின் ஒருவராக வகுப்பறைக்குள் வந்து கொண்டிருந்தனர். அதில் முதல்வர் எமது சகமாணவர் ஒருவர் அவர் மாஸ்டரிடம் அருகே வந்து ''சார் லேட்'' என்று இரந்து நின்றான். அவனைத் தொடர்ந்து வந்தவரும் அவனருகே அமைதியே உருவாக நின்றிருந்தார். மாஸ்டரோ 'நோட்ஸ்' ஆர்வத்தில் அவன் சொன்னதைக் கூடக் கவனிக்கவில்லை. எமக்கு மாத்திரம் குறிப்புகளைக் சொல்லிக் கொண்டிருந்தார். இரண்டாம் முறையும் அந் நண்பன் 'சார்' எனச் சற்றுப் பலமாகவே சொல்லி விட்டான் அப்போது தான் விழித்தவராகச் 'சரி, சரி போய் உட்கார்'' என ஓர் உறுமல் உறுமிவிட்டுத் தொடர்ந்தார்.

அடுத்த நண்பர் எமக்குப் புதுமுகமாக இருந்தாலும், நாம் ஏதோ ஓர் புதுமுகம் பாவம் இங்கு வருகிறதே என எண்ணி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். அவரும் 'சார்', 'எக்ஸ்கியூஸ் மி' என ஏதோ பேசினர்; மாஸ்டருக்கு ஒரே கொதியாகி விட்டது. ''இந்தா உங்களை யெல்லாம் இப்படிச் சும்மா பட்டி மாடுகள் மாதிரி விடமுடியாது அதிபரிடம் போய்த் துண்டு எடுத்துக் கொண்டு வா'' என்று ஒரேயடியாகக் கூறி 'நோட்சை'த் தொடர்ந்தார். நம்ம முதல் நண்பன் முகத்தில் ஓர் சிறு சிரிப்புக் கீறு தோன்றி மறைந்ததையும், நாங்கள் கவனிக்கத் தவறவில்லை. இரண்டாமவர், ''நான் அதிபரிடம் இருந்து தான் வருகிறேன்'' என்றார் ''அப்போ போய் அவருடன் இரு'' என்று சீறி விழுந்தார்.

சார், நான் இங்கு ''இன்ஸ்பெக்சனுக்கு'' வந்துள்ளேன் எனக் கூவினர். மாஸ்டர் இருந்த மேசையை விட்டு ''சடக்'' என இறங்கித் தயவு செய்து மன்னிக்கவும் எனக் குழறியவாறே கைகட்டி நின்றார். சிரிப்பொலி அடக்க முடியாமல் வந்த சிரிப்பொலி ஓர் முறை வகுப்பறையின் சுவரில் முட்டி மோதி மறுபடியும் எதிரொலிக்கத்தது.

விஸ்வநாதன்
தாமோதரப்பிள்ளை,

நுகேகொட.

*

## சுருக்கெழுத்து சுவாரஸ்யம்

கொக்குவிலிலுள்ள, ''யாழ்ப்பாணம் தொழில் நுட்ப நிலைய''த்தில் படித்துக் கொண்டிருந்த போது நானும் மாணவர் மன்றத்தில் ஒரு அங்கத்தவராக இருந்தேன். மாணவர் மன்றத்தின் கூட்டம் மாதம் ஒரு தடவை நடைபெறும். இயல், இசை, நாடகம் முதலியன கூட்டத்தில் முக்கிய அம்சமாக இடம்பெறும். இதில் மாணவர்கள் தமது திறமைகளைப் பிறரறியச் செய்வதில் பின் நிற்கமாட்டார்கள். அத்துடன் கல்வி சம்பந்தமான சொற்பொழிவுகளும் நிகழும். பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரை அழைத்து வணிகம், பொருளாதாரம், பொறியியல் விஞ்ஞானம் சம்பந்தமான சொற்பொழிவுகளை நடாத்துவதும் உண்டு.

அன்று நடைபெற்ற கூட்டத்தில் சுருக்கெழுத்தாசிரியர் திரு. சி. இராமலிங்கம் அவர்களை அழைத்திருந்தோம். தலைவர் ஆசிரியரை மேடைக்குப் பேச அழைக்கும் போது, ''இப்பொழுது 'சுருக்கெழுத்தும் நடைமுறையும்' என்னும் பொருள் பற்றி திருவாளர் சீ. சுருக்கெழுத்தாசிரியர் அவர்கள் பேசுவார்கள்.'' என்றது தான் தாமதம் சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது. தலைவர் ஒன்றும் புரியாமல் திகைத்தார். சபையில் சிரிப்பு அடங்கியபாடு இல்லை. வெட்கத்தால் முகம் கறுத்த தலைவர் செயலாளரை ''ஏன்? என்ன நடந்தது?'' என்று வினவினர். அதற்குச் செயலாளர், ''திருவாளர் சி. இராமலிங்கம் ஆசிரியர் என்பதற்குப் பதிலாக திருவாளர் சீ. சுருக்கெழுத்தாசிரியர் என்று அல்லவா குறிப்பிட்டீர்கள்.'' என்றார். தான் விட்ட தவறை உணர்ந்து கொண்டே தலைவரும் எங்களுடன் சேர்ந்து சிரிக்கத் தொடங்கினர். அதற்குள் சுருக்கெழுத்தாசிரியர் மேடைக்கு வந்து, சுருக்கெழுத்தும் நடைமுறையும் என்ற பேச்சைக் கேட்க முன்னரே மாணவர் தலைவர் எனது பெயரையே சுருக்கி நடைமுறையில் கொண்டு வந்து விட்டார் போல் இருக்கிறது என்றார். அன்றைய கூட்டம் சிரிப்புடனே கழிந்தது.

வேலணையூர் ஆ. த. சித்திரவேல்
கொழும்பு-6.

# SIR உம் முருக்கம் சாறும்

நான் க. பொ. த. விஞ்ஞான வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலம், ஒரு நாள் விஞ்ஞான அறைக் கூடத்தில் உயிரியல் பாடத்திற்கான பல பரிசோதனைகள் செய்து கொண்டிருந்தோம். எங்கள் விஞ்ஞான ஆசிரியர் மயிலு என்பவர் ஒரு முழு அப்பாவி நாங்கள் அவருக்கு டூப் விட்டு ஜெயிப்பதில் எங்கள் இன்பம் பெரிது. பரிசோதனையின் போது ஆசிரியர் ''சிலமட மோனஸ்'' என்னும் ஒரு விதமான பிராணியை கவனத்திற்கு எடுத்தார். இப்பிராணி மழைகாலங்களில் பெய்த மழை நீர் நீண்ட நாட்களாக ஒரு இடத்தில் தங்கி நின்று; அந்நீர் ஒரு விதமான பச்சை நிறத்தை அடைந்திருக்கையில் இப்பிராணியை அந்நீரில் காணலாம் என்று கூறினர். மாணவ மாணவிகள் எல்லோரும் இப்பிராணியைப் பார்ப்பதற்கு மிகவும் ஆவல் கொண்டார்கள். ஆசிரியரும் சம்மதித்தார். என்னையும் நண்பன் வீரசிங்கத்தையும் ஆசிரியர் அனுப்பினர் பச்சை நிற மழைத் தண்ணீர் கொண்டு வருவதற்காக. நாம் இருவரும் வெளியில் சென்று பச்சை நிற மழை நீரைத் தேடினேம் கிடைக்கவில்லை. தண்ணீர் இன்றி வகுப்பறைக்குப் போகவும் மனம் வரவில்லை. நண்பன் வீரசிங்கம் மிகவும் குறும்புத்தன முள்ளவன். நண்பனின் திட்டப்படி முருங்கை இலைச்சாற்றுடன் தண்ணீரைக் கலந்து போத்தலில் இட்டு விஞ்ஞான அறைக்கூடத்திற்குக் கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுத்தோம். ஆசிரியர் போத்தலிலிருந்த முருங்கை இலைச் சாற்று நீரை ''மைக்குரஸ் கோப்'' கண்ணாடியில் போட்டு அதில் தெரிந்த ஏதோ குறிகளை இதுதான் ''கிலமட மோனஸ்'' என எல்லா மாணவ மாணவிகளுக்கும் காண்பித்தார். ஆனல் நாங்கள் இருவரும் பார்க்கவில்லை. வகுப்பு முடிந்து ஆசிரியர் சென்ற பின்பு நடந்த சம்பவத்தை சக மாணவ மாணவிகளுக்குக் கூறி எல்லோரும் சிரித்தோம்.

எஸ். ஞானமுத்து.
கொக்குவில்.

★



ஒருவர்:-
என்னுடைய மூத்த மகனின் குணத்தை ''போல் ரூம் டான்ஸ்'' கெடுத்துப் போட்டுது, இளைய மகனின் கையெழுத்தை போல் போய்ன்ட் பேனை கெடுத்துப் போட்டுது.

—ஜோக்கிரடீஸ்.

# ''கும் அன்ட் விஜி''

★ ★ ★

-விடை

1. ''சப்பாத்தைக் கழட்ட வேண்டாம், அத்தான் அப்படியே ஒரு படத்திற்குப் போகலாம் சரிதானே'' என்று சொல்லி முடிக்கத்தான், விஜி கோப்பியும் கையுமாக............

2. ''ஆகா! மனைவி என்றல் இப்படித்தான் இருக்கவேண்டும். அத்தனை பொருட்களையும் அவளே.........''என்று ஆச்சரியப் படவேண்டாம். அந்தப் பொருள்கள், விஜியின் சாறி, ஸ்னே, பவுடர், லிப்ஸ்டிக், கியூட்டெக்ஸ், நான்கு சோடிச் செருப்பு முதலியவை தான். அவற்றிற்குரிய பணத்தை அழுது தொலைத்த அந்தத் துக்கச் சுமையைச் சுமப்பவனுக்கு இந்தச் சுமையை வேறு ஏன் கொடுப்பான் என்று தான் விஜி அவ்வளவு பொருள்களையும் (அதோ அந்த 'டக்சி' வரை) தானே சுமக்கிருள்.

3. அவளுக்கு நன்ருகத் தெரியும், இனியும் அத்தான் கடைக்குச் சென்று திரும்ப நேரம் இல்லை என்பது. ''மத்தியானம்வரும் போது எனக்கும் உங்களுக்குமாக 'ஆனந்த பவானில்' ஒரு சாப்பாட்டுப் பாசல் வாங்கி வாருங்கள் அத்தான் என்பதற்குத்தான் விஜியின் இந்தப் பீடிகை.

4. விஜிக்குத் தெரியும் அந்தக் குழந்தை நித்திரை கொள்ளும் நேரம் இப்போது என்று.

5. குழந்தை அழும் நேரம் இது தான் தெரிகிறதா? அது அழத் தொடங்கு முன்...... .........அங்கு, குசினியில் ஒரு வேலையுமில்லை மண்ணுமில்லை.

6. ''இதோடு எனக்கும் மூண்டு சாறிகள் எடுத்திருக்கிறன், அத்தான், அதுக்கும் சேத்துக் காசை அனுப்பி வையுங்கள்''

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணம் கொடுத்து வாங்கலாம்!

நேரத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா?

நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே

**மில்க்வைற் சலவைப் பவுடர்**




**மில்க் வைற் தயாரிப்புகளின்
இதர பரிசு விபரங்கள்**

(50 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு பொலித்தீன் பாக் அல்லது ஒரு பலவர்ணப் படம்

(100 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்

300க்கு மேற்பட்ட உறைரகளுக்கு) அழகிய துவாய் ஒன்று அல்லது ஒரு டொக்குமென்ட் பாக்

(20 மில்க் வைற் பார் சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்

(20 மில்க் வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு) ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)

(10 மில்க்வைற் நீல சோப் உறைகளுக்கு) யோகக்கலை என்னும் புத்தகம் அல்லது எம்மால் வெளியீடு செய்யப்படும்புத்தகங்களில் ஒன்றை இனுமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற் குறிப்பிட்டபடி மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரியாலயத்தில் அல்லது தபாலில் அனுப்பி இலவசப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம.

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

கிளை: மில்க்வைற் டிப்போ, 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13

**அரசியல் வாதி:-** வாயில் வந்ததெல்லாம் புலம்பக் கூடாது. யோசித்துப் பேசிப் பழக வேணும்.

**மகள்:-** அப்பா......நான் உங்களைப் பின் பற்றுகிறேன்.

—ஜோக்கிரடீஸ்.

---

**பணக்காரப் வீட்டுப்பிள்ளை:-**

அம்மா...ஏழைகள் சுவாசிப்பதில்லையா.........அவர்கள் வீட்டில் மின்சார விசிறியில்லையே!

—ராமி.

---

## மறக்க முடியாத முறுவல்

கிளாஸ் கட்பண்ணிக் கொண்டு ஷோ விற்குப் போவது எங்கள் வழக்கம். அன்றும் நண்பர்களுடன் நானும் போயிருந்தேன். படம் ஓடிக் கொண்டிருந்த போது அருகிலிருந்தவரிடம் நெருப்பு வாங்கிச் சிகரெட்டும் பற்ற வைத்துக் கொண்டேன். இடை வேளைக்கு லைற் போடவும் அருகிலிருந்தவரைப் பார்த்தேன். ஐயய்யோ......எங்கள் வகுப்பாசிரியரல்லவா இருந்தார். மெதுவாக எழுந்து வேறு பக்கமாகத் தலையைத் திருப்பிக் கொண்டே வெளியே ஓடி வந்து விட்டேன். மறுநாள் ஆசிரியர் வகுப்பிற்கு வரும் பொழுது ஒரு கட்டுப் புத்தகங்களுடன் வந்தார். ''அடே....சந்திரா... இங்கே வா... இவை உன்னுடைய புத்தகங்களா?'' என்றார் போய்ப் பார்த்தேன். சாட்சாத் என்னுடையவையே தான். அப்பொழுது தான் முதல் நாட் தியேட்டரில் ஆசிரியரைக் கண்டு விட்டு புத்தகத்தையும் விட்டு ஓடி வந்தது ஞாபகம் வந்தது. மன்னிப்புக் கேட்டு விட்டுப் புத்தகங்களை எடுத்து வந்தேன்.''

—மீசாலை சந்திரன்



படத்தயாரிப்பாளர்:- ஏதோ புதிதாக ஒரு நட்சத்திரத்தை நீங்கள் கண்டுபிடித்து விட்டதாக கேள்விப்பட்டோம். எங்களுக்குத் தெரிவித்தால் எங்கள் படத்துக்கு உடனே கதாநாயகியாகப் போட்டுவிடுவோம்.

வானிலைய விஞ்ஞானி:-?...?...?...

ச. ரா. பாலகிருஷ்ணசர்மா




எஜமானி:- (கோபமாக) நான் பேசுகிறதை வேலை செய்யாமல் நீ ஒட்டுக் கேட்டுக் கொண்டு திரிகிறாயே? இதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தாய்?

வேலைக்காரி;-தொலைபேசியில் ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தேன்.

பா. மனோரமா.

## மகிழடி



**சாவித்திரி:** என்ன அருந்ததி முகம் வாடியிருக்கு?

**அருந்ததி:** கண்தெரியாதவரைக் கலியாணப் பண்ணியிட்டு விழித்திருக்க வேண்டியிருக்க வேண்டியிருக்கு!

**சா:** என்ன கண் தெரியாதவரா!?

**அரு:** கண் தெரியாமல் சாராயம் குடிப்பவர்.

**சா!** குடி ஈரலைப் பாதித்திருக்குமே?

**அரு!** ஓ....பாதி ஈரல்தானும் இருக்கு, எல்லாம் எங்களை ஆளவந்த வெள்ளைக்காரன் செய்த அனியாயம். தமிழன் பாலிலிருந்து மோரைக் கண்டு பிடித்தான், வெள்ளைக்காரன் கள்ளிலிருந்து சாராயத்தைக் கண்டுபிடித்தான்.

**சா:** ஐயய்யோ! எங்களை வாழவைக்கிற மோர் இருக்க மாழவைக்கிற சாராயம் குடிக்கிறார்களே! இப்பதான் ஒரு ரஷ்ய உயிர் இயல் ஆராய்ச்சியாளர் மோரிலிருக்கும் பக்டீரியாக்கள் மனிதனை நீண்டகாலம் வாழவைக்குமெனக் கண்டுபிடித்திருக்கிறாராம்.

**அரு** ...சரி சரி வாறன் போயிட்டு. ஈரல் எரிந்தவர் எரிந்து விழப்போறார்.

**திருடனின் மனைவி:** ஏங்க இரவு 10 மணியாகிறது. தொழிலுக்குப்போகல்லையா?

---

## பழசு

மாமியார் போசனம் மஹா சௌக்கியம்

## புதிது

மறியல் போசனம் மஹா சௌக்கியம்

சிவாஜி,

# அப்பாவுக்கு அறிவு அப்பால்

கோடை விடுமுறை விட்டாகி விட்டது. பள்ளிக் கூடங்கள் எல்லாம் சாத்தியாகி விட்டன. பையன்கள் பாடுயோகந்தான்! ஆனால் ஆதித்தனின் அப்பாவுக்கு பெருந் தொல்லையாகப் போய் விட்டது.

"என்ன தொல்லையாகிப் போயிருக்கும் என்று தானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன்."

ஆதித்தனின் அப்பா காலைப் பத்திரிகை படித்துக் கொண்டிருப்பார். "இலங்கைக்கு வரும் இந்தியப் பத்திரிகைகள் தடை செய்யப்படுகின்றன" போன்ற திடுக்கிடும் செய்திகளை மிக்க பரபரப்புடன் படித்துக் கொண்டிருப்பார். அவர் பரபரப்பையோ துடி துடிப்பையோ சற்றும்" பொருட்படுத்தாமல் அப்பா சூரியன் பூமியிலிருந்து எத்தனை மைல் தூரத்திலுள்ளது? என்று கேட்பான் ஆதித்தன்.

அவர் தனக்கு வருகிற ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு "ரொம்ப ரொம்ப தூரத்திலிருக்கிறது?" என்பார்.

"அப்படிச் சொன்னால் போதாது, சரியாக எத்தனை மைல் தூரத்திலிருக்கிறது என்று சொல்ல வேண்டும்" என்பான் ஆதித்தன்.

புத்தகங்களை யெல்லாம் புரட்டித் தேடிப் பார்த்து. "ஒன்பது கோடி மைல் என்பார்" உடனே அவன் போய் விடுவான்

பிறகு சரியாகப் 15 நிமிடம் கழித்து மறுபடியும் வருவான். அப்போது அப்பா ஏதாகிலும் ஆபீஸ் காகித கட்டுக்களை எடுத்து வைத்துக் கொண்டு வேலை பார்த்துக் கொண்டிருப்பார். அவர் ஆபீஸ் வேலையையோ, ஆபீஸ் வேலை சரியாக வராமல் அவர் தவிப்பதையோ சற்றும் பொருட்படுத்த மாட்டான் ஆதித்தன். "அப்பா! சந்திரன் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று கேட்பான். அப்பாவுக்கு கோபம் கோபமாக வரும். இருந்தாலும் அலுத்துக் கொண்டே சொல்லுவார். சற்று நாழிகைக் கெல்லாம் வந்து, "ஏன் அப்பா, மழை நாம் விரும்புகிற போதெல்லாம் பெய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?" என்பான்.

இப்படி ஒரு நாள், இரண்டு நாள் என்றால் பொறுத்துக் கொள்ளலாம். நாள், பொழுது வேளை என்று பாராமல் ஆதித்தன் இப்படி நச்சரித்தால் அவன் அப்பா தான் என்ன பண்ணுவார்?" "என்னஇது? சும்மா நச்சரிக்கிறாயே! உன்னைப் போல பையனாக இருந்த போது எங்கப்பாவை இப்படி நச்சரித்திருந்தால் என்ன ஆகியிருக்கும் தெரியுமா?" என்றார்.

"இப்போது என் கேள்விகளில் பாதிக் கேள்விகளுக்காவது "டக்" "டக்" என்று உங்களுக்கு பதில் சொல்லத் தெரிந்திருக்கும்!" என்று உடனே பளிச் சென்று பதில் சொன்னான் அதிகப் பிரசங்கியான ஆதித்தன்.

பாநிலா இலுத்தனை,


## வேல் முருகா ஊதுபத்திகள்



சிவன்: பக்தா! ஏனைய பக்தர்கள் எல்லோரும் மோட்சத்தை விரும்ப, நீ மட்டும் ஈழத்தில் பிறவி எடுக்க விரும்பும் காரணம் யாதோ?

பக்தன்: எல்லாம் வல்ல பரம்பொருளே! உமக்கு மனமகிழ்ச்சி அளிக்கும் "வேல் முருகா" ஊதுபத்திகள் இங்கு கிடைப்பதில்லை. "வேல் முருகா" ஊதுபத்திகள் ஈழத்தில் மட்டுமே கிடைக்கின்றமையால் நான் ஈழத்தில் பிறக்க வரம் அருளும் ஐயனே!

தயாரிப்பாளர்கள்:

ஜெகஜோதி அன் கொம்பனி

குருதெனியா, கண்டி.

# சுழல் கேடயம்




**ஒருவர்:** அறிவாளிகள் எவ்வளவு புத்தகங்கள் எழுதிக் குவித்தாலும் இரண்டே இரண்டு புத்தகத்திற்குத்தான் டிமான்ட் இருக்கு.

**மற்றவர்:** என்ன அந்த இரண்டு புத்தகங்களும்??

**ஒருவர்:** ''செக்ஸ்'' புத்தகத்திற்கும் ''செக்'' புத்தகத்திற்கும்.

—ஜோக்ரட்டீஸ்.

**மனைவி:** நைலோன் சாரி பெண்களுக்கு அழகு தானே?

**கணவன்:** அழகுதான் ஆனல் ''லோன்'' வாங்கி நைலோன் வாங்கி அணிவது அழகில்லே.

செல்வி. சந்திரிகா.

### பெண்ணும் புலவனும்

கண்ணென்னும் மீனுக்குள்
கடலாடக் கண்டேன்
கடல்நீந்திச் செல்கின்றேன்
கரைகாண வில்லே.
பெண்ணென்னும் புதிருக்குள்
என்னென்ன புதுமை
புதுமைக்குள் மூழ்கினேன்
புலவனுய்ப் போனேன்

—கோகுலன்

சடுதி மரண விசாரணை அதிகாரி:- தண்ணீர் அள்ளும் போது துலா தற்செயலாக முறிந்து விழுந்து துலாப்பாரம் தாங்க இயலாது நசுங்கிய தனால்தான் இப் பெண்ணின் மரணம் துரதிஷ்டமாக சம்பவித்தது. விபத்து நேர்ந்த சமயம் நீர் எங்கே போயிருந்தீர்?

கணவன்:- துலாபாரம் பகல் காட்சி பார்க்கப் போயிருந்தேன்.

ச. ரா. பா. சர்மா



### கவிதை எது?

கற்பனைகள் கவிதையென்றால்
காதலொரு கவிதை
அற்புதங்கள் கவிதையென்றால்
அன்பு ஒரு கவிதை
சொற்சுவையே கவிதையென்
றால்
சுந்தரத்தமிழ் கவிதை
நற்பொருள்கள் கவிதையென்
றால்
நல்லறிவே கவிதை.

—கோகிலன்

# நேரு கர(ண்)டி விட்டார்

அன்றொரு நாள் ஜவகர்லால் நேருவும், அவரது நண்பர் ஒருவரும் விருந்து ஒன்றிற்குச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது ஜவகருடன் சென்ற நண்பர் ''நேருஜி இன்று நடைபெறும் விருந்தில் எம்மில் யார் ஒரு கரண்டியை திருடிக் கொண்டு வருகிறாரோ அவரே உண்மைத் திறமைசாலி'' என்றார். நேருவும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

விருந்து ஆரம்பமாகியதும் நேருவும், அவரது நண்பரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு விருந்துண்ணலாயினர். திடீரென்று அவரது நண்பர் ஒரு கரண்டியை சட்டைப் பையினுள் மெதுவாகப் போடுவதை நேரு கண்டார். எனினும் தான் கவனிக்காததுபோல இருந்து விட்டு, விருந்து முடிந்ததும் அங்கு வந்திருந்த சிறு பிள்ளைகளைத் தன்னருகில் அழைத்தபின் ''பிள்ளைகளே தான் இக் கரண்டியை எனது பையினுட் போட்டபின் அவரின் பையிலிருந்து எடுத்துக் காட்டுகிறேன்'' என்று கூறி விட்டு, அங்கிருந்த ஒரு கரண்டியை தன் பையினுட் போட்ட பின் நேரு தம் நண்பர் அருகிற் சென்று அவர் ஏற்கனவே இரகசியமாக பையினுள் வைத்திருந்த கரண்டியை எடுத்துக் காட்டினார். நேருவின் நண்பரோ செய்வதறியாது நின்றார். கூடியிருந்த பிள்ளைகளோ ஆச்சரியப்பட்டுப் போயினர்.

இருவரும் வெளியில் வந்த பின் தம் பையினுள்ளிருந்த கரண்டியை நேரு எடுத்து நண்பரிடம் காட்டினார். அவரின் நண்பர் சிரித்தவாறு ''நேருஜி நீங்கள் அரசியலில் மட்டுமல்ல திருட்டிலும்திறமைசாலி தான்'' என்றார்.

—ச. குகதாசன்

வளர்க்கும் மீன்களுக்கு
பிஷ்மெக்ஸ்
மீன் உணவையே
கொடுங்கள்




பிஷ்மெக்ஸ்
இப்பொழுது இலங்கையில்
எல்லாக் கடைகளிலும்
விற்பனையாகிறது.
'' பிஷ்மெக்ஸ் ''
பிறவுண்சனின்
ஒரு தயாரிப்பு!

சித்திரமும் சிறு கதையும் பரிசுக் கதை.




# சோமு சம்சாரியாகி விட்டான்

—என். தியாகராசா.

"சோமு சோமு என்ன நித்திரையே"..........

"ஆரது இஞ்சை சோமு இல்லை அது கடைக்குப் போட்டுது" என்று யன்னல் சீலையை இழுத்துவிட்டுக் கத்திய சோமுவின் தரும பத்தினி உடனே சீலையை பழைய இடத்துக்கு இழுத்துவிட்டாள். வெளியே நின்ற குமார், மூர்த்தி, ரகு, கோபு எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது.

சோமுவைத் தேடி வந்த நேரம் சரியில்லை என்று ஒருவரை ஒருவர் கேள்விக் குறியுடன் பார்த்துக்கொண்டனர்.

"டேய் உவளென்னடா தலைவிரிகோலத்தோடை கரடி மாதிரி இருக்கு" என்றான் ரகு.

"எங்கெயடா இந்த அமாவாசையை இவன் தேடிப் பிடிச்சான்" என்று குறுக்கிட்டான் கோபு.

"சில வேளை அவள் கண்ணகி நாடகத்துக்கு மேக்கப் போடுறாளோ" என்றான் குமார்.

"ஓமடா அவள்எங்கை சோமு எண்டுகேக்க அது கடைக்குப் போட்டுது எண்டேக்கை, தெரியுது இவளும் கண்ணகி பரம்பரைதான் எண்டு, புருசனை ஆடு மாடுமாதிரி அது இது எண்ணுறாள்" என்று பதிலடி கொடுத்தான் கோபு.

"டேய் டேய் அவளை ஏன்ரா குறை சொல்லுறியள் புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன். இப்ப அவள் புல்லா மதிக்கிறாள் எனி கல்லாயும் மதிப்பாள்" என்று தன்னுடைய விமரிசனத்தைக் கூறி முடித்தான் ரகுநாதன்.

"டேய் அவளின்ரை காதிலை விழுந்தால் போச்சு" என்று கூறியபடியே நண்பர் கூட்டம் தெருவுக்கு வந்தது.

"அங்கே சோமு வாறான்ரா" என்றான் ரகு எல்லோரும் தெருவை நிமிர்ந்து பார்த்தனர் தெருவில் சோமு குனிந்த தலையுடன் எங்கோ தூரப் பிரயாணம் செய்யும் நாடோடி போல் பல சுமைகளுடன் முன்னேவந்தான். இவர்களுக்கு சிரிப்பும் பரிதாப உணர்வும் ஒன்றாக வந்தது "எங்கை போறியள் வீட்டை வாருங்கோவன்ரா" என்று தன்னைச் சமாளித்துக் கொண்டே கேட்டான். அவனுக்குத் தன்னைக் கிண்டல் செய்துவிடுவோர்களே என்ற பயம் "ஏன்ராப்பா அங்கை நாங்கள் காலமை சும்மாதான் இஞ்சை வாறமெண்ட நாங்கள் இப்ப இதாலை வந்தாப் போல நீ இருக்கிறியோ எண்டு பார்க்க உன்ரை வீட்டை போய்த்தான் வாறம் நாங்கள் போறம்" என்று சோமுவின் வீட்டுக்கு மறுபடியும் போக விருப்பமில்லாமல் கூறினான். கோபு. ஆனால் சோமு சம்பிரதாயத்துக்காக விடாப் பிடியாக வாருங்கோ என்றான். எல்லா நண்பர்களும் அரை மனத்துடன் அவன் பின்னே சென்றனர் சோமுவோ வேண்டா வெறுப்புடன் கூட்டிச் சென்றான்.

வீட்டுக்குள்ளே சென்றவர்கள் முன்பு குரல் வந்த அறையை விறைத்துப் பார்த்துக் கொண்டே முன் கோலில் இருந்தார்கள். சோமு கைச் சாமான்களை இறக்கி வைத்துவிட்டு தேனீர் பிளாஸ்கை மனைவியின் அறையில் வைத்துவிட்டுத்

திரும்பினான். நண்பர்களுடன் ஏதோ பேச நினைத்தவனாக ஒரு கதிரையில் அமர்ந்தான். இதற்குள் ''என்ன பிளாஸ்கை விழுங்கிறாதே, கிளாஸ் கொண்டாருமன்'' என்று பக்கத் தறையில் குரல் கேட்டு திடுக்கிட்டு குசினிக்கு ஓடி கிளாசுடன் மனைவியின் அறைக்குள் நுளைந்தான் சோமு. சுமார் அரைமணித்தியாலம்சோமுவைக் காணவில்லை. ஹோலில் இருந்தவர்கள் எதுவும் பேசவில்லை பிறேயர் நடந்தது. எல்லோரும் அடித்த சிலைகளாய் ஆடாது அசையாது எதையோ பறி கொடுத்த நிலையில் பேசாதிருந்தனர். சோமுவின் குடும்ப வாழ்வு இவர்களை பிரமிக்கச் செய்து விட்டது.

திடீரென்று எல்லோரது மௌனத்தையும் கலைக்கும் வகையில் ஒரு தட்டில் நான்கு கிளாஸ் தேனீருடன் முன்னே வந்தான் சோமு. அவனது லோங்ஸ், சேட்டில் தாராளமாக பட்டிருந்த கரி, மண்ணெண்ணை மணம், இத்தனை நேரமும் குசினியில் சோமு ஒரு தேனீர் போராட்டம் நடத்திவிட்டு வருகிறான் என்பதை நண்பர்களுக்கு எடுத்துக்காட்டியது'' தேனீர் குடித்தபாதி குடியாத பாதி எல்லோரும் திடீரென்று எழுந்தனர். ''நாங்கள் வாறம் சோமு'' சோமு எதுவும் பேசவில்லை. அவன் சும்மா நின்றான். ''டேய் ரகு இவன் எந்த மிருகசாலையில் இந்த மிருகத்தைப் பிடிச்சுக் கொண்டு வந்தானோ'' என்றான் கோபு, சோமுவின் மனைவியை மனதில் திட்டிக்கொண்டே ''அது பணத்திமிருடா, இவனும் பணத்துக்கு ஆசைப் பட்டான் இப்ப அனுபவிக்கிறான்'' என்றான் மூர்த்தி. ''இனிமேல் அவனை எங்கடை கிளிக்கில் இருந்து கைகழுவி விடவேண்டியதுதான் இனி அவன் ஒண்டுக்கும் சரிவரான்'' என்றான் குமார். ''சோமு பாவமடா அவன் சம்சாரியாகிவிட்டான்'' என்று கதையை முடித்தான் குமார்.


கலியாண வைபவங்களுக்கு தேவைப்படும்
புடவை - நகை தினிசுகளை



சிங்காரம்ஸ் (புடவை)

டைமா (நகை)



ஸ்தாபனத்தில் வாங்கலாம்
47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 20875

# ஆச்சி பயணம் போகிருள்

— செங்கை ஆழியான் —

"உதென்ன ராசா, பெரிய பழமா இருக்கு..."

"இது யானை வாழைப் பழம்..." என்ருன் சிவராசா; "யாழ்ப்பாணத்திலும் இருக்குது ஆச்சி! ஆனல், மலைநாட்டுப் பக்கம் இது அதிகம்"

"பத்திரே பத்திரே சிங்களே தினமின தவச... வீரகேசரி..."

"ரொபி... சுவிற்றி ரொபி..."

"உந்த அன்னுசிப் பழத்திலை ரெண்டு மூன்றை வாங்கிப் போடு, அங்கை கொண்டு போய்ச் சாப்பிடலாம்" என்ருள் ஆச்சி.

"கொண்டு போறது கரைச்சல் ஆச்சி. அங்கினேக்கை வாங்குவம்..."

"அதென்ன பழம் கட்டித் தூக்கி இருக்கிறது...?"

அது பப்பாப்பழம், மாமி! இங்கை பப்பாப்பழத்துக்கு வலு டிமாண்ட்..." என்ருள் செல்வி.



இதுதான் கிஸ்ஸிங் பெண்ட்'

"யாழ்ப்பாணத்திலை பப்பா மரம் என்ன மாதிரி வளரும்... எங்கடை சனம் எளிய சனம் சும்மா வளர்கிற பழங்களைச் சாப்பிடாது... காசு கொடுத்து வாங்கித்தான் சாப்பிடுங்கள் வளவுக்கை தாஞ வளர்ந்து பப்பாமரம் நின்ருலும் வெட்டி எறிஞ்சு போடுங்கள மலிவான சத்தான பழம் அவையளுக்குப் பிடிக்காது..." என்ருள், ஆச்சி.

"இப்ப நிலைமை மாறிப் போச்சு..." என்ருன் சிவராசா. பஸ் கம்பளையை விட்டுப் புறப் பட்டது.

"சரியான குலுக்கம்" என்ருள், செல்வி.

"சில்லுக்கு மேலை இருக்கிற சீற்றிலை இருக்கிறம் அது தான் குலுக்கம்"

"எல்லாம் சில்லுக்கு மேலை தானே?" என்ருள் ஆச்சி.

கம்பளை நகரைப் பின்னல் விட்டு விரைந்து கொண்டிருந் தது, பஸ்.

"இது என்ன றேட்டுக்கள் பாம்பு போல வளைஞ்சு, வளைஞ்சு கீழை பார்க்கத் தலையைச் சுத்துது தற்செயலா பஸ் விலகிஞல்"

"கதிர்காமக் கந்தனை நேரில் போய்ப் பார்க்கலாம்"

"உப்பிடியெல்லாம் கதையாதீங்கோ" என்று அவனேடு ஒட்டி நெருங்கினுள், செல்வி.

'சில்'லென்ற காற்று வீசிக் கொண்டிருந்தது.

பஸ்ஸில் இருந்த இரண்டு மூன்று பேர். சத்தி எடுத்தார்கள். பஸ்ஸின் குலுக்கமும், ஏற்றமும், அவர்களது உடம்பிற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

"பஸ்பிரயாணம் ஒத்துவராது சத்தி எடுப்பன் என்று எனக்கும் சொன்னவை" என்ருள், ஆச்சி.



'இது தான் பல்கலைக் கழகமா'

எப்பக்கம் பார்த்தாலும் பசுமை போர்த்துக் கிடக்கின்றது. பச்சைப் பசேல் என்று தேயிலைத் தோட்டங்கள் பரந்து கிடக்கின்றன. வளைந்து வளைந்து செல்லும் வீதிகள், அதள பாதாளத்தின் பயங்கர அழகையும் திருப்பித்திருப்பிக் காட்டின.

"இதெல்லாம் தேயிலைத் தோட்டங்களா?"

"ஓம் ஆச்சி இனிவரப் போகிற தோட்டங்களைப் பாரேன் மிகப் பெரியவை. இந்த மலைநாடு முழுவதும் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன் காடாகத்தான் இருந்திருக்கும். அவர்கள் இங்கு வந்து, இந்திய தொழிலாளரைக் கொண்டு இந்தக் காடுகளை எல்லாம் பொன் கொழிக்கும் பெருந் தோட்டங்கள் ஆக்கினர்... இந்தியத் தமிழர் இல்லாவிடில் இலங்கை மலைநாடு மலடியாகத் தான் இருந்தி

ருக்கும். தேயிலை, றப்பர், கொக்கோ, கோப்பித் தோட்டங்கள் இலங்கை எங்கினும் உண்டாக்கப்பட்டன''


''இன்று இலங்கையின் பொருளாதாரமே இவைதான். இவைகளை ஆங்கிலேயர் உண்டாக்காது விட்டிருந்தால் இன்று இலங்கையின் நிலை நினைத்தே பார்க்க முடியாது'' என்றாள் செல்வி.

''தவறு'' என்றான் சிவராசா: ''எமது சுயதேவைப் பொருளாதாரத்தைப் பாழ்படுத்தியதே இப்பெருந்தோட்டங்கள் தாம்... இத்தோட்டங்கள் ஆரம்பிக்கப் படாது இருந்திருந்தால். எமது முழுக்கவனமும் நெற்செய்கையிலும் வேறு உணவுப் பயிர்ச் செய்கைகளிலும் சென்றிருக்கும் ஒரு காலகட்டத்தில் வெளி நாடுகளுக்கு இலங்கை உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்திருக்கிறது...''

ஆச்சிக்குக் குளிர் காற்று கண்களை தூங்க வைத்தது. முன்னும் பின்னும் ஆடினாள்.

பஸ் விரைந்து திரும்பி. நின்றது. ஆச்சி விழித்துக் கொண்டாள்.

''கதிர்காமம் வந்திட்டுதே?'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.



'முகத்தில் மலர்ந்தது
தாமரையா?'

''இது புசல்லாவை, ஆச்சி! கதிர்காமத்தை அடைய இன்னும் முக்கால் தூரம் இருக்கு''

''மாமிக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்கோ கோப்பியும் வாங்குங்கோ'' என்றாள், செல்வி.

புசல்லாவையை விட்டு பஸ் புறப்பட்டபோது நேரம் பிற்பகல் ஒரு மணி. புசல்லாவை மிகச் சிறிய ஒரு தோட்ட நகரே.

''இந்த வாழைப்பழத்தையும், பிஸ்கோத்தையும் தின்று, கோப்பியையும் குடிக்க வயிறு நிரம்பிப் போச்சு'' என்றாள் ஆச்சி.

''எனக்கு வயிற்றைப் பிரட்டுது...சத்தி வரும்போல இருக்குது'' என்றாள், செல்வி

''சத்தி வருகுதா, பிள்ளை... இப்படி மூலைக்கு வா...''

''வேணும். மாமி, வரும்போது வாறன்'' சிவராசாவிற்குப் பக்கத்தில் இருந்து எழுந்து போகச் செல்விக்கு மனமில்லை.

''சத்தி வருகுதா, செல்வி?'' என்று கவலையோடு கேட்டான், சிவராசா.

''இப்ப ஒரு மாதிரி இருக்கு...'' என்று சிரித்தாள், செல்வி.

''புசல்லாவை என்றதும் எனக்கு ஒரு நினைவு வருகுது, செல்வி நான் இந்தக் கல்லூரியில் படிக்கும்போது. அந்தோனி என்றொரு விசர்க் கிழவன் கல்லூரிக்கு முன்னால் இருந்து பிதற்றிக் கொண்டிருப்பான். அவன் அடிக்கடி 'புசல்லாவை எங்கே' என்று போகிறவர்களையும் வருகிறவர்களையும் கேட்டுக்கொண்டே இருப்பான்''

''அவனை நானும் கண்டிருக்கிறன்'' என்றாள் செல்வி: ''அடுத்த ஸ்ராண்டிலை பஸ் நிக்கும்போது ஒரு எலும்பிச்சம் பழம் வாங்கித் தாங்கோ''

புசல்லாவையிலிருந்து நுவரெலியா செல்லும் பாதை மிக



அற்புதமானது; இயற்கையின் எழுத்தில் அடங்கா அழகை அங்கு காணலாம். வானளாவி உயர்ந்த மலைகளில் மழை முகில்கள் திரண்டு தவழும், கண்களுக்கு எட்டிய தூரம்வரை ஒரே தேயிலைத் தோட்டங்கள். பசேல் என்ற காட்சி

தேயிலைத் தோட்டங்களுக்கு ஊடாக பஸ் நெளிந்து நெளிந்து செல்லும். அருவிகளின் சல சல வென்ற ஓசையும், மென் குளிர்காற்று 'உர்'ரென்று விரையும் ஒலியும், பஸ்ஸின் ஏற்ற இறக்கச் சத்தமும் கேட்பதற்கு இனிமையாகத்தான் உள்ளன.

'நம்ம பஸ்'

தோட்டங்களுக்கு நடுவே தொழிற்சாலைக் கட்டிடங்கள் உயர்ந்து நிற்கின்றன. தொழிலாளர் வாழ்கின்ற 'லைன்கள்' ஆங்காங்கு காணப்படுகின்றன.

செல்வி ஒரு தடவை சத்தி எடுத்துவிட்டாள்; மிகவும் களைத்துப் போனாள்.

பஸ் விரைந்தது.

''இத் தேயிலைத் தோட்டங்களை யாழ்ப்பாணப் பகுதியிலை செய்யமுடியாதோ?'' என்றொரு சந்தேகத்தை ஆச்சி எழுப்பினாள்.

''கீரிமலையில் செய்யலாம். மாமி'' என்று சிரித்தாள், செல்வி.

''மெய்யாச் செய்யலாமே?''

''இல்லை, ஆச்சி! தேயிலை வளர்வதற்கு மலை நாடுதான் ஏற்றது...சாய்வான தரை அதற்குத் தேவை, நீர் தேங்கி நிற்காத தரை வேணும், நல்ல மழையும் வேணும், யாழ்ப்பாணம் வரண்டபூமி, சமதரை, அங்கு தேயிலை பயிரிடமுடியாது'' என்றான், சிவராசா.

''தேயிலை என்னவென்று எடுக்கிறது...பச்சை இலையாய்க் கிடக்குது! எப்படித் தேத்தண்ணிக்குப் போடுகிற தேயிலை போல வருகுது?'' என்றாள், ஆச்சி.

'முதலில், ஆச்சி, இப்படிப்பட்ட மலைச் சாய்வுகளை, நீர் தங்காது ஓடக் கூடியதாகச் செம்மைப் படுத்தி, மூன்று மூன்றரை அடி இடைவெளியில் குழிகள் தோண்டிப் பசளையிட்டுத் தேயிலையை நடுவார்கள்''

''தேயிலை விதையையா?''

''விதையையும் நடுவதுண்டு பெரிதும் தேயிலைக் கன்றுகளையே நடுவர். இத்தேயிலைக் கன்றுகள் வளர்ந்தால் முப்பது அடி மரமாக வளரும்''

''உதெல்லாம் மூன்று நான்கு அடிச் செடியாகத்தானே.



சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

84, லோரிஸ் ரோட், கொழும்பு-4.



சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

84, லோரிஸ் ரோட், கொழும்பு-4.

[illegible]டக்கு...'' என்றாள் செல்வி.

''வளரவிடாது 'கவ்வாத்து'ச் செய்து விடுவார்கள்''

''என்னடா அது?''

''நுனிகளை வெட்டி விடுகிறது, ஆச்சி! வளரவிடாது மூன்று நான்கு அடிகளில் கத்தரித்து விட்டால் அவை புதராகச் செழித்து வளரும், புதிய கொழுந்துகளும் வரும்...ஒரு தேயிலைச் செடி வளர்ந்து பயன் கொடுக்க மூன்று ஆண்டுகள் வரை செல்லும்...மூன்று ஆண்டுகளுக்குப் பின்தான் கொழுந்து பறிப்பார்கள்...கொழுந்து எடுக்கும்போது இரண்டு துளிர்களையும் அதனோடு சேர்ந்த மொட்டையுமே பறிப்பர்......கொழுந்து இலையும் மொட்டும்தான் தேயிலையாகும் முற்றல் இலை நல்ல தேயிலையாகாது. நாற்பது ஐம்பது சிலவிடத்து அறுபது ஆண்டுகள் வரை கொழுந்து பறிக்க முடியும், ஒரு செடியிலிருந்து.''

''பறித்த கொழுந்தை என்ன செய்வார்கள்...?'' என்று கேட்டாள், ஆச்சி.

''தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்வார்கள். அங்கு அக்கொழுந்துகள் உலர்த்தப்படும்... பின் யந்திரங்களில் போட்டு அரைக்கப்படும். பின் வறுக்கப்படும்...அப்போது மணமான தேயிலை தயாராகிவிடும் பின் பெட்டிகளில் அடைத்து அனுப்புவர் அங்கே பார், ஆச்சி'' என்று சிவராசா ஓரிடத்தைச் சுட்டிக்காட்டினான்.

பஸ் விரைந்த வீதியின் சாய்வில் இருந்த தேயிலைத் தோட்டத்தில் பெண்கள் தேயிலை கொய்து கொண்டிருந்தார்கள். இருபது பெண்கள் வரை இருக்கலாம். அவர்களது முதுகில் தொங்கிய கூடைகளுள் அவர்களது கரங்கள் தேயிலைக் கொழுந்தைக் கொய்து வேகமாக வீசின. அம்மலைச்சரிவில் சற்றும் பயமின்றி அவர்கள் அசைந்து அசைந்து முன்னேறினர்.

''எவ்வளவு பயமான சாய்வு பயமில்லாமல் கொய்கிறார்களே பாவங்கள்''

''பயந்தால் வயிறும் காயுமே, ஆச்சி. அவர்களுக்குப் பழக்கமாகி விட்டது. நிறைமாதக் கர்ப்பிணிகள்கூட தேயிலை கொய்வார்கள், ஆச்சி வேலைக்கேற்ற ஊதியமில்லை, உரிமையுமில்லை...காலை ஆறு மணியிலிருந்து மாலை ஏழு மணி வரைவேலை...இடையில் ஒரு மணி லீவு...இவர்கள் இருக்கின்ற வீடுகள் மிகக் கேவலமானவை...வாழ வசதியற்றவை...''

''புருஷன்மார் உழைக்கிறதைச் சமைச்சுப் போடவே எங்கடை பெண்டுகளுக்கு நோ... அவன்கள் உழைக்கிறதைச் சோக்குப் பண்ணிக்கொண்டு திரிகிறாளவை...அவளவையை இங்கை கொண்டு வந்து விட்டால்'' என்றாள் ஆச்சி.

திடீரென்று சிவராசா கூறினான்!

''செல்வி எங்கடை அண்ணியும் இப்பிடித்தான் அடிக்கடி சத்தி எடுக்கிறா?...''

செல்விக்கு அந்த வேளையிலும் சிரிப்பு வந்தது. முகமெல்லாம் 'குப்'பென்று சிவந்தது.

''உங்களுக்குப் பகிடியா இருக்கு'' எனச் சிணுங்கினாள்.

''உதென்ன, ராசா! மேகத்துக்குள்ளாலை பஸ் போகுது என்று வியப்பைக் கொட்டினாள், ஆச்சி.

''இனி இப்படித்தான், ஆச்சி மேகங்கள் தாழ்வாகவே காணப்படும். நுவரேலியா நெருங்கிக் கொண்டிருக்கிறது......''

திடீரென மழை பொழியத் தொடங்கிவிட்டது; யன்னல் கண்ணாடிகளை இழுத்துவிட்டான், சிவராசா.

''நுவரேலியாவிலை தானே உன்ரை கொம்மான்ரை மருமகன் வேலையா இருக்கிறான்''

''ஓம்...ஆச்சி!...''

''நல்லாக் குளிருது...''

---


**ஆச்சி பயணம் போகிறாள்**

**கதையில்**

ஆவணி மாதத்தில் வெளியிட்ட அதே தொடரை புரட்டாதி மாதத்திலும் தவறுதலாக வெளியிட்டதற்கு நேயர்களிடம் மன்னிப்பு கோருகிறோம்.

( ஆர் )

---



**குழந்தையின் அம்மா:-** (கோபமாக) எவ்வளவு காலமாக நீங்கள் குழந்தைக்கு ''அனா ஆவன்னா'' சொல்லுகிறீர்கள். உயிர் எழுத்துப் படிப்பிக்க இவ்வளவு காலமா? மெய்யெழுத்து இனி எப்போ படிப்பிப்பது?

**டியூஷன்வாத்தியார்:-** கோபிக்காதீர்கள். உங்கள் மகனுக்கு இதுவரை படிப்பித்ததில் உயிர் முடிந்துவிட்டது. இப்போ மெய்தான் இருக்கிறது.

ச. ரா. பா. சர்மா

# ஊர்க்காவல்

—நாக-பத்மநாதன்

அதே நாய் தான்!

இல்லை, நாய்கள் என்று கூற வேண்டும் அங்கு நின்றவை இரண்டு நாய்கள்! நீங்களும் நானும் எல்லோரும் பள்ளிக் கூட நாட்களில் சிறு கதையாய் படித்தறிந்த நாய்களே அவை இரண்டும்!

ஒன்று கொழுத்த நாய்; கழுத்தில் தன் எசமானன் கட்டி விட்ட பட்டியை அது பெருமையோடு தாங்கிக் கொண்டிருந்தது.

மற்றது, ஒரு எசமானையும் அண்டி நிற்க முடியாத பரதேசி நாய்! சுதந்திரம் என்ற உணர்வின் பரிசாய் அது எலும்பு தெரிய மெலிந்து நின்றது, இருந்தும் அதிலும் அதற்கொரு மிடுக்கு! அதை விட்டு விடுவோம்!

பசுவிக்குரிய பெரிய நாய் தான் கதைத்தது தவறு, அந்த ஊர் சுற்றி நாயைத் திருத்த முடியாது என்ற முழு நினைவோடு தன் தலைவனிடம் போய்க் கொண்டிருந்தது. அந்த எசமானரும் அவரது வீட்டின் பிரமாண்ட தோற்றத்தைப் பார்க்கவே விளங்கிற்று எங்கள் சமூகத்தின் ஒரு 'பெரிய' மனிதர் தான்!

சாப்பிட்டு விட்டு சுகமான உறக்கத்தில் அவர் இறங்கிக் கொண்டிருந்தார். எசமானரைப் புரிந்த நாயல்லவா அது? எனவே தட்டாமல் குழப்பாமல் அவரது காலடியில் தலை வைத்து அது படுத்துக் கொண்டது.

திருப்தியின் முடிவு உறக்கம் அது இருவரையும் ஆட்கொண்டது. தணிந்தெரிந்த சிறு விளக்கு அவற்றுக்கு அழகு செய்து கொண்டிருந்தது.

ஊரின் வெளியிலோ கும்மிருட்டு. இப்போது நடுச்சாமம். பயங்கர நிசப்தமும் குடி கொண்ட வேளை. இவற்றினிடையே......ஏதோ ஒரு காலடிச் சத்தம் மெல்லெனக் கேட்கிறது. அந்த ஒலி தரும் விழிப்போடு பார்த்தால் ஓர் உருவம் தெரிகிறது. அது மெல்லனத் தெரு வழியே பதுங்கி நகர்ந்து வருகிறது. அது சந்தியில் வந்து திரும்புவது தான் தெரியும்.

''வள்!'' என விழுகிறது ஒரு குரல், தொடர்ந்தும் சிம்ம கர்ச்சனையுடன் துரத்திக் கொண்டோடுகிறது அந்த ஊர்சுற்றி நாய்! அவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறான்! பெரிய வீட்டுக்கு அப்பாலுக்கப்பாலும் அவன் ஓடி மறைந்த பின்னரே அது திரும்புகிறது. எனினும் கிளர்ந்தெழுந்த அதன் உளத் துடிப்பு ஒலிபெருக்காய் நின்று ஊரைக்காக்கிறது.


**சிக்கனமானது!** **பெறுமதிவாய்ந்தது!**

வெண்ணிற ஆடைகளையே மக்கள் விரும்புகின்றனர்.


**ஆனால் — தூய்மையான வெண்மையான கம்பீரமான தோற்றத்தை அளிக்கும் அந்த கம்பீரத்தை அளிப்பது.**

சைனிங்
- பார் சோப்
- நீல பார் சோப்
- ஸ்டார் சோப்
- டயிலட் சோப்

இன்றே வாங்குங்கள்.

**மைக்கல் இன்ட்டரியல் வேர்க்ஸ்,**

**57/14, கல்யாணி மாவத்த, தெலுங்கபாத்த, வத்தளை.**




# "நீ என் அம்மாவா?"

அம்மாக்குருவி தன்னுடைய முட்டையை அடைகாத்தது. முட்டை மெல்ல அசைந்தது.

''என்னுடைய குஞ்சு வெளியே வரப் போகிறது. இதற்கு சாப்பாடு ஊட்ட வேண்டும். என்னுடைய குஞ்சுக்கு ஏதாவது எடுத்துக் கொண்டு வருவோம்.'' என்று கூறி அது பறந்தது.

முட்டை அசைந்தது. அப்படியும் இப்படியுமாக உருண்டு உடைந்தது. குஞ்சு வெளியே வந்தது.

''என் அம்மா எங்கே?'' என்று கேட்டு அக்கம் பக்கம் பார்த்தது, அம்மாவைக் காணவில்லை. அண்ணாந்து பார்த்தது. அம்மாவைக் காணவில்லை. கீழே பார்த்தது. அம்மாவைக் காணவில்லை.

''என் அம்மாவைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டு கூட்டுக்கு வெளியே காலை வைத்தது,

கீழ் நோக்கிப் போனது.

கீழே கீழே போனது.

கீழே கீழே கீழே போய் பொத்தென்று தரையில் இருந்தது.

குஞ்சுக்குப் பறக்க முடியவில்லை. ஆனால் நடக்க முடிந்தது. 'என்னுடைய அம்மாவைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்' என்று கூறிக்கொண்டது.

அதனுடைய அம்மா எப்படியிருக்கும் என்று அதற்குத் தெரியாது அம்மாவைக் கடந்து போனது என்றாலும் அது கவனிக்கவில்லை.

பூனைக்குட்டியைச் சந்தித்தது.

''நீ என் அம்மாவா?'' என்று கேட்டது.

பூனைக்குட்டி பார்த்தது. உற்றுப் பார்த்தது. பூனைக்குட்டி அதனுடைய அம்மா இல்லை என்று தெரிந்து விட்டது. குஞ்சு மேலே நடந்தது.

ஒரு கோழியைச் சந்தித்தது.

''நீ என் அம்மாவா?'' கோழியைப் பார்த்துக் கேட்டது.

''இல்லை'' என்று கோழி கூறியது.

பூனைக் குட்டி அதன் அம்மா இல்லை.

கோழியும் அதனுடைய அம்மா இல்லை.

குஞ்சு எட்டி நடந்தது.

''என் அம்மாவைக் கண்டு பிடிக்க வேண்டும்'' என்று கூறிக்கொண்ட குஞ்சு ''எங்கே பார்க்கலாம்?'' என்று யோசித்துக்கொண்டது.

ஒரு நாயைச் சந்தித்தது.

''நீ என் அம்மா வா?'' என்று நாயிடம் கேட்டது.

''நான் உன் அம்மா அல்ல; நான் ஒரு நாய்'' என்று சொன்னது.

பூனைக்குட்டி அதன் அம்மா அல்ல.

கோழி அதன் அம்மா அல்ல.

நாயும் அதன் அம்மா அல்ல.

குஞ்சு மேலே நடந்தது. ஒரு பசுவைச் சந்தித்தது. ''நீ என் அம்மாவா'' என்று பசுவிடம் கேட்டது. நான் எப்படி உன் அம்மாவாக முடியும்.? நான் ஒரு பசு''-என்றது.

பூனைக்குட்டியும், கோழியும், அதன் அம்மாவல்ல. நாயும், பசுவும், அதன் அம்மாவல்ல.

''எனக்கு அம்மா இருக்கிறாளா?'' என்று சந்தேகமாகக் கேட்டது. பிறகு ''எனக்கு அம்மா இருக்கத்தான் வேண்டும். என்னாலே முடியும். அவளைக் கண்டுபிடிக்க என்னால் முடியும்'' என்று தீர்மானமாகக் கூறிக்கொண்டது.

குஞ்சு நடந்து போகவில்லை; ஓடிப்போனது.

ஓட்டை உடைசலான ஒரு கார் இருக்கக் கண்டது. இந்த பழைய கார் தன்னுடைய அம்மாவாக இருக்காது என்று பார்த்தவுடனே தெரிந்து கொண்டது. ஆமாம் இருக்கவே இருக்காது.

குஞ்சு நிற்கவில்லை. ஓடியது: ஓடோடிப் போனது.

ஒரு பள்ளத்தாக்கின் உச்சிக்கு வந்தது. அங்கிருந்து கீழே பார்த்தது. இயந்திரப் படகு ஒன்று போவதைக் கண்டது. 'அதோ

அம்மா'' என்று கூறிக்கொண்டது, குஞ்சு.

படகைக் கூப்பிட்டது; படகு நிற்கவில்லை.

திரும்பி நடந்தது, மேலே நிமிர்ந்து நோக்கியது. விமானத்தைக் கண்டது.

''அம்மா நான் இங்கே இருக்கிறேன்.'' என்று பலமாகக் கத்தியது.

விமானம் இறங்கவில்லை. அது பறந்து போய் விட்டது.

அதன் பிறகு குஞ்சு பென்னம் பெரிய உருவத்தைப் பார்த்தது. இது என் அம்மாவாகத் தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டது.

''அ தோ அதுதான் என் அம்மா'' என்று அங்கே போனது.

''அம்மா அம்மா நான் இங்கே இருக்கிறேன்'' பென்னம் பெரிய பொருளைப் பார்த்துக் கூறியது,

அது மண்ணை வாரிக் கொட்டும், இயந்திரம். அதன் மீது ஏறி நின்றது. இரைச்சலோடு மேலே ஏறியது.

''நீ என் அம்மா இல்லையா? ஐயையோ நான் இறங்க வேண்டும்.'' என்று கத்தியது,

ஆனால் அந்த மண்வாரி இயந்திரம் மேலே தூக்கியது.

மேலே, மேலே, மேலே போனது,

குஞ்சு உயர உயர போனது.

''ஐயோ, ஐயோ, ஐயையோ! என்ன செய்யப் போகிறாய். என்னை விட்டுவிடேன்''

மண்வாரி இயந்திரம் அப்படியே நின்றது.

''நான் எங்கே இருக்கிறேன் என் வீட்டுக்குப் போகவேண்டும். அம்மாவைப் பார்க்க வேண்டும்-'' என்று குஞ்சு சிணுங்கியது.

என்னவோ நடந்தது.

மண்வாரிக் கொட்டும் இயந்திரம் குஞ்சை மரத்தின் உச்சாணிக் கிளையில் இருந்த கூட்டுக்குள் போட்டுவிட்டது.

அந்த நேரம் பார்த்து அம்மா குருவி உணவோடு திரும்பியது. ''என்னைத் தெரியுதா குஞ்சு உனக்கு'' என்று கேட்டது.

'ஆமாம் எனக்குத் தெரியும். 'நீ பூனைக்குட்டி அல்ல.


'நீ கோழி அல்ல.

'நீ நாய் அல்ல.

'நீ பசு அல்ல.

நீ படகு அல்ல; விமானம் அல்ல; மண்வாரி இயந்திரம் அல்ல.

நீ ஒரு பறவை; நீ என் அம்மா'' என்றது.



# தேங்காய் விழுங்கும் யானை

இதோ இந்தப் படத்தில் வாயைத் திறந்து கொண்டிருக்கும் ஒரு யானையையும், இந்த வாய்க்கு நேரே ஒரு தேங்காயையும் இவை இரண்டுக்கும் இடையில் சற்று கீழே ஒரு புள்ளியையும் நீங்கள் காண்கிறீர்கள்.

நான் சொல்வதைப் போலச் செய்தால், இந்தத் தேங்காய் யானையின் வாய்க்குள் போவதைக் காண்பீர்கள்.

யானையின் வாய்க்கும், தேங்காய்க்கும் இடையில் இருக்கிறதே ஒரு புள்ளி, அதன் மீது உங்கள் மூக்கு நுனியை வைத்து தேங்காயையும் யானையின் வாயையும் உற்று நோக்குங்கள் தேங்காய் யானையின் வாய்க்குள் இருப்பதைப் பார்ப்பீர்கள்.

—ந. நல்லரெத்தினம்.

மகன்:- மை ரொம்ப விலை கூட வா அப்பா.

அப்பா:- ஏன் மகனே.

மகன்:- அம்மாவின் சாரியில் மை கொட்டினால் பாம்பு மாதிரி கொத்தவாருவே.

—செல்வன் மயூரன்

# பிறவிக்குணம்

பொல பொலவென்று விடிய வேண்டியதுதான் கொக் கொக் கொக் என்று கொக்கரித்து குரலைச் சரிப்படுத்திக் கொள்ளும். படபடவென்று இரண்டு முறை சிறகை அடித்து சோம்பல் முறித்துக்கொள்ளும் பிறகு இரை தேடப் புறப்பட்டு விடும். அந்தக் கோழி.

அது ஒரு தாய்க் கோழி அந்தக் கிராமத்தில் வாழும் சேவல்களும் கோழிகளும், கோழிக் குஞ்சுகளும் அதனுடைய பரம்பரைதான். பிள்ளைகள் பேரன் பேர்த்திகள், கொள்ளுப் பேரன் பேர்த்திகள் ஏராளமாக இருக்கின்றன.

எங்கெங்கே குப்பை மேடுகள் இருக்கின்றன; எங்கெங்கே சாக்கடைகள் ஓடுகின்றன என்பதெல்லாம் இதற்குத் தலைகீழ்ப் பாடம் சாப்பாடு தட்டுப்பாடு என்றுமே ஏற்பட்டதில்லை.

அன்றும் வழக்கம் போல் குப்பை மேட்டை அடைந்து காலால் கிண்டிக் கிளறி பூச்சிப் புழுக்களை உள்ளே தள்ளி நெஞ்சை நிறைத்துக்கொண்டது. சாக்கடையில் போய் தண்ணீர் குடிக்க அடியெடுத்து வைத்த கோழியின் கண்கள் ஆச்சரியத்தால் கொஞ்சம் அகல விரிந்தன. மனதில் அதற்குக் கிளுகிளுப்பு உண்டானது. சற்றுத் தூரத்துக்கு அப்பால் வைக்கோல் போருக்குப் பக்கத்தில் கிடந்த முட்டைகளைக் கண்டுதான் அதற்கு இந்தக் கிளுகிளுப்பு ஏற்பட்டது.

தாயுள்ளம் பூரிப்படைந்தது. அடைகாக்க வேண்டும் என்ற எண்ணமும் உண்டாகியது. முட்டைகளையெல்லாம் பாதங்களால் ஒன்று சேர்த்து மெதுவாக அமர்ந்தது. உடம்பிலுள்ள கணகணப்பை மெல்லமெல்ல முட்டைகளுக்குள் ஏற்றி உயிர் கொடுக்கத் தொடங்கியது.

(29-ம் பக்கம் பார்க்க)



# நாய் படுப்பதற்கு முன் ஏன் இடத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறது?



நாய் கால்களை நீட்டி முடக்கி அப்படியே படுத்து விடுவது கிடையாது. பாயாக இருந்தாலும் சரி தரையாக இருந்தாலும் சரி அது படுக்கும் இடத்தை பலமுறை சுற்றிச் சுற்றி வந்து அதன் பிறகுதான் படுக்கும் எல்லா நாய்களுக்குமே இந்தப் பழக்கம் உண்டு. ஏன், தெரியுமா?

நாய் வீட்டு மிருகமா, காட்டு மிருகமா என்று உங்களைப் பார்த்துக் கேட்டால். உடனே வீட்டு மிருகம் என்று சொல்லி விடுவீர்கள். ஏனென்றால் பாடப் புத்தகத்தில் நாய் ஒரு வீட்டு மிருகம் என்றே படித்திருக்கிறீர்கள். நாய் வீட்டு மிருகமாக வளர்வதற்கு என்றால், ஆதியில் காட்டு மிருகமாகத்தான் இருந்தது. சிங்கம், புலி, காடி, நரி, ஆகிய மிருகங்கள் இன்று எப்படி காட்டில் வாழ்கின்றனவோ இவற்றைப் போலவே நாயும் காட்டில் வாழ்ந்தது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட பழக்கம் தான் இது.

காட்டுத் தரை ஒரே புல்லாக இருப்பது தான் வழக்கம். தரையில் படுக்கப் போகும் நாய் அப்படியே உடம்பைக் கிடத்தி விட்டால் நீண்டு கொண்டிருக்கும். புற்கள் குத்துமல்லவா? உடம்பில் புற்கள் குத்திக் கொண்டிருந்தால் தூக்கம் வருமா?வராது எனவே நாய் முதலில் புல்லைச் சமப்படுத்தும் இதற்காக புற்களின் மீது சுற்றிச் சுற்றி நடக்கும். கால்கள் மிதிபட மிதிபட, புற்கள் மடங்கிவிடும் அதன் பிறகு படுத்து விடும்.

ஆதிகாலத்தில் உண்டான பழக்கம் இன்று வரை பரம்பரையாக ஒட்டி வந்து விட்டது இது தான் உண்மை.

———

# மாவலியே போய் விடடி---

—கருணையூர்ப் பாலன்—

(மகாவலி கங்கை வடக்கே வரப்போகிறதாம், என்ற செய்தி, தொண்டமானாற்றின் காதில் விழுந்துவிட்டது கேட்கவா வேண்டும்......இதோ தொண்டமானாற்று நங்கை, தன் வாழ்வில், மகாவலிப் பெண் பங்கு கொள்ளவருவதாக எண்ணிப் பொருமுகின்ருள்)

அகத்துடையாள் நானிருக்க ஆசைகாட்டி என்னவரின்,
அகன்றிருக்கும் மார்பினிலே தவழ்ந்திடத் துணிந்து யிங்கே,
ஆர்ப்பரித்து வரப்போகும் மாற்ருளே! மாவலியே!!
அமைதியுடன் வேண்டுகிறேன், மாவலியே போய்விடடி......

இங்கே தான் நான் பிறந்தேன் என்னவரை மணம்புரிந்தேன்
இங்கே நீ வந்து விட்டால், என்னுரிமை என்னுகும்.
பெண்ணுகப் பிறந்தவர்க்குப் பெரும் சொத்துப் புருஷனடி,
என் வாழ்வு முடிக்க வரும், மாவலியே போய்விடடி......

வளமில்லை, நீளமில்லை வஞ்சி நான் தாழ்ந்தவள் தான்
உளம் நொந்து வாடுகின்றேன், உள்ளதைத்தான் கூறுகிறேன்,
வளம் தேடுமென்பதியை உனதாக்கத் துணிந்துவிட்டாய்
களம் வேண்டாம் கன்னியே! மாவலியே போய்விடடி......

என் வளத்தைப் பெருக்கிட்டால் என்பதிக்கு வளமிலேயோ?
உன்னுல்தான் என்னவர்க்கு உற்றவளம் கிடைத்திடுமோ?
உனேத்திருப்பும் நேரமதில் எனைப்பெருக்கிச் செப்பனிட்டால்,
உற்ற வளம் கொடுத்திடுவேன், மாவலியே போய்விடடி......

தொண்டமானுறுயென்னைத் தூசென மதிக்க வேண்டாம்
மண்டலம் போற்றவாழ்வேன் ஆளுவோர் செப்பனிட்டால்
கொண்டவள் உரிமை தன்னைக் கொடுத்திட விழையமாட்டேன்.
அண்டவேண்டாமிங்கே, மாவலியே போய்விடடி......


## சிரித்திரு

நீதிமன்றத்தில் ஒரு குற்றவாளியைக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்த நியாயவாதி தான் கேட்கும் கேள்விகளுக்கு ஆமா, இல்லையா, என்று ஒரு வார்த்தையில் பதில் சொல்லும்படி அவனை வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

அதற்கு அந்தக் குற்றவாளி தான் ஒரு கேள்வி கேட்பதாகவும் அதற்கு அப்படி ஒரு வார்த்தையில் பதில் சொல்லும் படியும் நியாயவாதியிடம் சொல்லி விட்டு அவரிடம் ஒரு கேள்வியை போட்டானும். அவன் கேட்ட கேள்வி இதுதான்.

''உம்முடைய மனைவியை அடிப்பதை விட்டீரா?''

ஆம் என்று சொன்னுல் தான் மனைவியை முன் அடித்து வந்ததாகவும் இல்லை என்று சொன்னுல் இன்னும் அடித்துக்கொண்டிருப்பது மாகி விடுமாதலால் அந்த நியாயவாதி ஒன்றும் போசாமல் இருந்து விட்டாராம். —அருள்



**கணவன்:** நீங்களும் நானும் ஒரு போட்டோ எடுக்க வேண்டும்.

**மனைவி:** நான் என்னத்திற்கு... என்னுடைய சீதனப் பணத்தைப் பக்கத்தில் வைத்து எடுங்க.

**கணவன்:** சும்மா கேலி பன்னுதீர்.

**ஜோக்கிராட்டீஸ்**

**பிறவிக்குணம்....................**

(28-ம் பக்கம் தொடர்ச்சி)

இதையெல்லாம் மரத்தில் குந்தியிருந்த ஒரு தூக்கணுங்குருவி அவதானித்தது. விர் ரென்று பறந்து போய் கோழிக்கு முன்னுல் நின்றது.

''அட முட்டாளே! நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய் இருந்திருந்து பாம்பின் முட்டைகளை அல்லவா அடைகாக்கத் தொடங்கிவிட்டாய். விஷப் பாம்புக் குட்டிகள் வெளிவந்ததும் முதன் முதலில் உன்னையல்லாவா தீண்டிக்கொன்றுவிடும்'' என்று புத்திமதி கூறியது.

நீதி: என்னதான் நன்மை செய்தாலும் சிலரின் கொடிய குணம் மாறவே மறவாது.

[ ஈசாப் கதை ]

இடம் நிரப்ப ஒன்றுமில்லாத காரணத்தால் கீழ்க்காணும்வசாகம் அவ்விடத்தைப் நிரப்புகின்றது. நேயர்கள் மன்னிக்கவும்.

கள் நன்று பெண்கள் மிக நன்று.

அருளியவர் மைனர் மச்சான்

# மாத்திரைக் கதை

''இந்த மண்வெட்டி எப்போது பார்த்தாலும் மண்ணை வெட்டி அகழ்ந்துகொண்டே இருக்கிறதே......மண் வெட்டிக்கு வேறு வேலையே இல்லையா?'' என்று புல்லை மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளில் ஒன்று மற்றதைப்பார்த்துக் கேட்டது. அதற்கு மற்ற ஆடு அர்த்தபுஷ்டியான ஒரு பதிலை வெளியிட்டது:-

''நண்பா, அப்படி ஒன்றும் மண்வெட்டியைப் பற்றி அலட்சியமாகப் பேசாதே. மண்வெட்டியின் பூர்வீகம் உனக்குத் தெரியுமா? மண்ணின் ஆழ்த்தில் பல்லாயிரம் அடிகளுக்கும் கீழே உள்ள இரும்புச் சுரங்கமொன்றில் இருந்து பெயர்த்தெடுத்து வெளிக்கொண்டு வரப்பட்ட இரும்புப் பாறையின் ஒரு சிறு பகுதியே அது இப்போது மண்வெட்டி எங்கு பார்த்தாலும் நிலத்தை அகழ்ந்து கொண்டிருக்கிறதென்றால் என்ன அர்த்தம்? தான் இருந்து வந்த பழைய இடத்துக்குத் திரும்பவும் ஓடிப் போய்ச் சேர்ந்துவிட மண்வெட்டி கொண்டுள்ளது ஏக்கமும் துடிப்புந்தான் நண்பர் அதன் அகழ்தல் வேலை. உறவு என்பது எவ்வளவு அற்புதமான விஷயம் தெரியுமா?''

—காசி ஆனந்தன்

அன்பின் புறத்தோற்றமே உழைப்பு, அன்பாக, ஆசையாக, உனக்குச் செயலாற்ற முடியாவிட்டால்; கசப்போடுதான் உன்னால் வேலை செய்ய இயலும் என்றால்; வேலையை விட்டு விடு, தெரு ஓரமாகப் போய் உட்கார்ந்துகொள். உவகையோடு உழைக்கிறார்களே, அவர்களிடம் பிச்சை வாங்கிப் பிழை, அது மேல்.

—கலீல் ஜுப்ரான்


ஏன் துள்ளி எழுந்தீர் ஐயா!



இந்த இரத்த உருத்தினரை
இன்றே ஒழித்துக் கட்டுங்கள்.

றன்பக்

மூட்டைப் பூச்சி, மற்றும் கொசு போன்ற
விஷக் கிருமிகளை பூண்டோடு
அழிக்க வல்லது,

தயாரிப்பாளர்கள்:

அப்துல்லா இண்டஸ்றீஸ்

அன்ட் பேப்பர் பேக்ஸ் உற்பத்தியாளர்கள்

72, பாபர் வீதி, — கொழும்பு-13.

## நாலு பேரைக் கேட்டோம்

# “பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்துவதால் இனமொழிச் சமத்துவம் ஏற்படுமா”?

இன, மொழிப் பிரச்சினைகளால் இன்னற்படும் நாடுகளுள் நமது நாடும் ஒன்றாகி விட்டது. பல்வேறு இனத்தவர்கள் வாழுகின்ற நாட்டினிலே இப் பிரச்சனைகள் தலையெடுக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவை முன்பும் இருந்தனவா என்றால்- இல்லை; அப்படி அவை இருக்கவும் முடியவில்லை! ஏனெனில், ஒரு எஜமானுக்குக் கீழே, அந்நிய அதிகாரத்தின் கீழ் நாம் எல்லோரும் ஒன்றாக ஆளப்பட்டு வந்தோம். அப்பொழுது நாட்டு மக்களிடையே இன, மொழிப் பிரச்சனைகள் தலைகாட்ட முடியவில்லை!

இரண்டாவது உலகமகா யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கீழைத்தேய நாடுகள் பல சுதந்திரமடைந்தன. நாடு சுதந்திரம் அடைந்ததும் நம்மவர்கள் ஆளவந்தார்கள்.

அரசியற் கட்சிகள் முளைத்தன ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கோஷமிட்டு, வாக்காளர்களில் சவாரிவிட்டு, ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தன; கூடவே இன, மொழிப் பிரச்சினைகளும் எழுந்தன. அசுரவேகத்தில் வளர்ந்து விட்ட இன, மொழிப் பிரச்சினைகள் இப்பொழுது-தோற்றுவித்தவர்களையே ஆட்டிவைத்து, நாட்டுக்கே இன்னல்களையும் அவமானத்தையும் தருவிக்கின்றது!

இந்தச் சூழ் நிலையிலே இந்தக் குரல் கேட்கின்றது! அதாவது, ‘பொருளாதாரச் சமத்துவம் ஏற்படுவதால் இன, மொழிச் சமத்துவம் ஏற்படும்’ என்று! இது எங்கிருந்து வருகின்றது? அது தான் கவனமாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்!

இடதுசாரிக் கட்சிகள் தான் இக் கருத்தைப் பிரசவித்திருக்கின்றன. இக் கருத்தின் மூலம் (இடதுசாரிக்) கட்சிகள் நாட்டிலே பரந்த நல்ல ஆதரவைப் பெற்றுப்பலம் அடையும் வாய்ப்பு நிச்சயமாக உண்டு!


ஆனால்—

இன, மொழிப் பிரச்னைகள் தோன்றியுள்ள நாட்டினிலே எப்படித்தான் பொருளாதாரச் சமத்துவம் ஏற்படும்? பொருளாதாரச் சமத்துவமும் ஏற்படாது; உண்மையைச் சொல்லப் போனால், அதன் வழியாக, இன மொழிச் சமத்துவமும் ஏற்படாது! ஏனெனில், பொருளாதாரச் சமத்துவம் ஏற்படுவதற்கு இன, மொழிப் பாகுபாடற்ற நல்லெண்ணம் முதலில் வேண்டுமே! அது தான் இல்லையே!

பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, மலேசியா முதலிய நாடுகளிலே இன, மொழிப் பிரச்னைகள் இல்லையா? பொருளாதாரச் சமத்துவம் நிலவும் அந் நாடுகளிலேயே இன, மொழிச் சமத்துவம் நிலவுகின்றதா? எனவே, பொருளாதாரச் சமத்துவம் பெற்றுவிட்டால், இன, மொழிச் சமத்துவமும் ஏற்படும், என்று எண்ணுவது தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது போலாகும் என்கிறேன்.

காட்டிலே, கடலிலே ஒரு இயற்கை நியதி உண்டு. அதாவது, பெரிய இனம், சிறிய இனத்தைத் தனது இரையாக்கிக் கொள்வது. இயற்கையை மனிதன் இப்பொழுது வென்று வருகிறான் எனினும் இவ்வியற்கை நியதியை சிறிய (சிறுபான்மை) இன மனிதர்களால் வெல்ல முடியாது எனக் கருதுகிறேன். சிந்திக்க வேண்டுகிறேன்!

**—சரவணையூர் செல்லையா திருஞானசம்பந்தர்**



**சிங்கள நண்பர்:-** தமிழ் சமஅந்தஸ்திற்குப் போராடுறீர்களே.........நீங்கள் தமிழ்ப் பத்திரிகை வாங்கிப் படிக்க நான் காணவில்லையே.

**தமிழ் நண்பர்:-** வீ டோன்றீட் ரமில் பேப்பேர்ஸ்.

**சிங்கள நண்பர்-** உங்களுக்கு தமிழ் பேசவும் தெரியாதா.?

**ஜோக்கிரடீஸ்**

# நகுக

''சிரீ''

**சொல்லாராய்ச்சிமாணவர்:** ஏன் குருதேவா, ''சட்டி'' என்ற சொல் தமிழ்ச் சொல் இல்லைத்தானே!

**ஆசிரியர்:** ஏன் அப்படி நினைக்கிறாய்?

**மாணவர்:** ''ச'' என்ற எழுத்தை முதலாகக் கொண்டு சொல் எதுவும் தமிழில் இருக்க முடியாதென்று தொல்காப்பியத்தில் இருக்கிறதே!

**ஆசிரியர்:** அந்தச் சூத்திரம் முழுப்பிழை. அது தனித் தமிழ்ச் சொல்லேதான். அதற்கான காரணத்தையும் சொல்லி விடுகிறேன். சட்டி ஒன்றைத் தூக்கிச் ''சட்''டென்று போட்டாயானால் அது ''டி'' என்ற சத்தத்தோடு உடைவதைக் காண்பாய் ''சட்,'' என்று போட ''டி'' என்று உடைவதால் சட்டியென்ற பெயர் வந்தது.

**ஆசிரியர்:** இமாலய உச்சியாகிய எவறெஸ்டில் முதன் முதல் ஏறியவர் யார்?

**மாணவன்:** கில்லேறி.

**ஆசிரியர்:** அவர் தமிழரா அந்நியரா!

**மாணவன்:** அந்நியர்!

**ஆசிரியர்:** அவர் ஒரு தமிழர்.

**மாணவன்:** எப்படி?

**ஆசிரியர்:** அவர் பிறந்தபோதே அவர் மலையேறுவதில் வல்லவராய் இருப்பார் என்று பெற்றோருக்குத் தெரியும். எனவே தான் கில்லேறி என்று பெயர் வைத்தனர். ''கில்'' என்றால் மலை, ஏறி என்றால் ஏறுபவர்.

**ஆசிரியர்:** சீலை என்ற பெயர் எப்படி வந்தது?

**மாணவர்:** அந்தநாளில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் போவோர் இந்தியாவில் இலங்கைச் சீலைகளை விற்றுவிடுவார்கள் என்பதற்காக இலங்கைச் சுங்கப்பகுதியார் ஆடைகளில் சீல் அடித்து விடுவார்களாம். சீல் அடித்தது சீலை என்று ஆயிற்று.



**ஒருவர்:** சுங்கச் சாவடிக்கு கஸ்டம்ஸ் என்ற பெயர் எப்படி வந்தது?

**மற்றவர்:** பயணிகளுக்கு கஷ்டம் தருவதையே தொழிலாகக் கொண்டவர்கள் அங்கே வேலை பார்ப்பதால்.



**ஒருவர்:** ''மாந்தர்'' என்ற பெயர் எப்படி வந்தது?

**மற்றவர்:** மாந்துவதற்காகவே வாழ்கின்றவர்களாதலால் (மாந்தல்-உண்ணுதல்)

## பக்குவம்

நடராசா, கந்தையா என்போர் சகோதரர்கள். இருவரும் திருமணம் செய்து பிள்ளை குட்டிகளுடன் வாழ்பவர்கள். இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. ஒருவரோடொருவர் மனம்விட்டுப் பேசுவதில்லை.

நடராசாவின் மகள் பெரிய பிள்ளை ஆகினாள்; அதாவது பக்குவப்பட்டாள் பூப்பு நீராட்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் இது பற்றிக் கந்தையாவுக்கு எதுமே தெரியாது. தன் மகள் பக்குவப்பட்டதைப் பற்றி நடராசா தமது தமையனாகிய கந்தையாவுக்கு அறிவிக்கவில்லை.

தண்ணீர் வார்ப்பின் பிறகு கந்தையா இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவருக்கு வருத்தமாகவும் இருந்தது. கோபமாகவும் இருந்தது. தம்பிக்குக் கடிதம் ஒன்று தீட்டினார்:-

''செல்வி பக்குவப்பட்டுவிட்டாள் என்பதறிந்து மகிழ்ச்சி. பெற்றோர்களாகிய நீங்களும் விரைவில் பக்குவப்படவேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.''




## றெக்சி 'லெவண்டர்'
## டல்க்கம் பவுடர்

நாள் முழுதும் நறுமணத்துடன்
குழுமையாக உங்கள்
திரேகத்தை வைத்திருக்க,

ஹெக்சோ குளோரபில் (G-11) கலந்த
றெக்கி வென்டர் டல்கம் பவுடரை
பாவியுங்கள்.

**ROXY CORPORATION,**
64, Hultsdorf Street,
COLOMBO-12.

# அலன்ஸ் டொபி

உயர்ந்த ரகம் சிறந்த தயாரிப்பு

ருசிமிக்கது

நீங்கள் குடும்பத்துடன் இனிமையாக மகிழ்ச்சியுடன் இருக்க

அலன்ஸ் டொபியை

சுவையுங்கள்.

3, 4 ருத்தல் பேக்குகளில் எங்கும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:

## ஏப்ரஹாம் இண்டஸ்ட்ரீஸ்,

கொழும்பு-12.

JAFFNA & COLOM

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. பதிவு இலக்கம்:கியூபி-59/300

முயல் மார்க் நூல் போன்ற இடை உடையாள்!'



அழகு ரசனை உள்ளா
வர்கள் விரும்புவது
முயல் மார்க் நூலையே

வானவில் வர்ணங்களில் வகைவகையான முயல் மார்க் தையல் நூல்களைஎங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட் மனுபக்சரிங்**
**கம்பெனி,**

கொழும்பு-12

101/4 சென் பெனடிக்ஸ் வீதி, கொழும்பு-13ல் உள்ள சி. சிவ ஞானசுந்தரம் அவர்களால் 201, டாம் வீதியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 21388.